JL
Y5926.Vm211,N2
N28.2.9
2.20491.

ர் நாடு ரூ. 2.
வெளி நாடு ரூ. 2-4.

பதிவு எண் M. 229

வேளாள மித்திரன்.

"VELALA MITRAN."

ஓர் அரிய மாத இதழ்.

மார்கழி மீ.

இதழ் ௧

OFFICE OF THE REGISTRAR OF ...
7 MAR 1930
MADRAS

வரப்புயர நீருயரும் ;
நீருயர நெல்லுயரும் ;
நெல்லுயரக் குடியுயரும் ;
குடியுயரக் கோலுயரும் ;
கோலுயரக் கோனுயர்வான்.

ஏரும் இரண்டுளதாய், இல்லத்தே வித்துளதாய்,
நீரருகே சேர்ந்த நிலமுமாய்---ஊருக்குச்
சென்றுவர அணித்தாய்ச், செய்வாருஞ் சொற் கேட்டால்
என்று முழவே யினிது.

(ஔவை.)

"வேளாள மித்திரன்" ஆபீஸ்,
மதுக்கரை போஸ்டு,
(Via) போத்தனூர் (கோயமுத்தூர் ஜில்லா).

வேளாள மித்திரன்.

பொருளடக்கம்.

1. காந்தி பிள்ளைத் தமிழ்.	173	7. உண்மை யறிவ தெப்படி?	190
2. வேளாளன் கடமை.	174	8. குறிப்புகள்.	198
3. பாசுரப்படி ஸ்ரீராமாயணம்.	177	9. உலக நடப்பு.	203
4. திருமுருகாற்றுப்படை.	181	10. தெரிந்த மணிகள்.	204
5. நச்சுப் பொய்கை.	183	11. ஆரோக்ய தரிசனம்.	205
6. எந்த விவாகம் நல்லது?	187	12. உலக விநோதம்.	209

ஸ்ரீமதி பண்டிதை அசலாம்பிகை அம்மாள் நூல்கள்

காந்தி புராணம். (இரண்டாம் பதிப்பு) ரூ. 2—0—0
திலகர் மான்மியம் ரூ. 0—0—0

பாரதியார் நூல்கள்

சுதேச கீதங்கள், முதல் இரண்டு பாகங்கள், கண்ணன் குயில் பாட்டு பாரதி அறுபத்தாறு பாஞ்சாலி சபதம் முதலியன சேர்த்தது. நேர்த்தியான பைண்டு செய்துள்ளது. விலை ரூ 4-0-0 வேளாள மித்திரன் சந்தாதாரர்கட்கு ரூ 3-0-0

வசனங்கள் :— இதில் ஞான ரதம், சந்திரிகையான் கதை, நவதந்திரம், வேதரிஷிகள் கவிதை, தராசு முதலியன அடங்கியுள்ளன பைண்டு செய்யப்பட்டது. ரூ. 3. சந்தாதாரர்கட்கு ரூ. 2.

	ரூ.	அ.	பை
காந்தியடிகள் சரித்திரம்	0	8	0
காந்தியடிகள் சிறைச்சாலை அனுபவ நூல்கள்	0	8	0
இந்தியாவுக்கு ஸ்வாதீனமும் அதன் அவசரமும்	0	4	0
ஒத்துழையாமை ஏன்?	0	8	0
குடியும் அபினியும்	0	2	0
மாகாத்மா காந்தியின் இந்திய சுய ராச்சியம்	0	8	0
இந்தியாவும் சுயாட்சியும்	0	8	0
பரத நாட்டின் நிலை	1	0	0
ஸ்ரீ கிருஷ்ணன் தூது	1	0	0
நால் வகைத் தோற்றத்தார் நன் மகா நாடு (அல்லது கொலை மறுத்தல்)	0	6	0

இதில் காணும் புத்தகங்கள், ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டியவைகளே.

சரஸ்வதி புத்தக சாலை,
மதுக்கரை (via) போத்தனூர்.

சந்தாதாரருக்கோர் அறிக்கை.

வேளாளச் செல்வரே!

நவீன சாதனங்களால் உலகம் மிக நெருங்க பிணிக்கப்பட்டுள்ள இக்காலத்தில், உலக விஷயங்களை அறிய வேண்டிய அவசியத்தையும், அவை உணர்த்த வெழும் பத்திரிகைகளுக்கு ஏற்ப நித்ய கண்ட, கஷ்ட நஷ்டங்களையும் தாங்கள் அறியாததல்ல. பொருளீட்ட, பிழைப்புகளைக் கருதியன்று; தேச, சமூக, சமய தொண்டாற்றுதற்கெனவே "மித்திரனை" ஆரம்பித்தோம். கடந்த 2 வருடங்களாக நேர்ந்த பெரும் பொருள் நஷ்டத்தையும் பொருட்படுத்தாது, இனியேனும் நமது மரபினர் ஆதரிப்பாரென்ற நம்பிக்கையுடன், நடத்தி வருகிறோம். நமது சமூகப் பத்திரிகையை நமது மக்களே இன்னும் ஆதரிக்க முன்வராவிடின், வேறெவரிடம் முறையிடுவது? எவர் ஆதரிப்பர்? பலவேறு வழிகளில் விரயமாகும் திரண்ட பொருளின் ஓர் சிறு பகுதியை இதன் வருட சந்தாவாகச் செலுத்தி, ஊக்க மளிப்பின் அது, தேச, சமய, சமூகத் தொண்டாகாதா? வேளாள வள்ளல்களே! மித்திரனை ஆதரியுங்கள். உண்மை யுணரும் நன்மக்களுக்கு நீண்ட விண்ணப்ப மெதற்கு? இவ்வாண்டு சந்தாத் தொகையை 12-2-30க்குள் செலுத்தாதாருக்கு, சஞ்சிகை வி. பி. யில் அனுப்பப் படும். வேண்டாதார் அதற்கு முன்னரே தெரிவித்து விடுதலே நலம். வி. பி. யை திருப்பி அனுப்புவதால் எமக்கு அதிக நஷ்டமுண்டாவதால் வேளாள நன்மரபினர்க்கு உரியதாகாது. நன்றே செய்மின் இன்றே செய்மின்.

ஆசிரியர்.

உ

சிவமயம்

வேளாள மித்திரன்.

உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

மலர் 2 } சுக்கில-௵ மார்கழி-௴
1929-௵ டிஸம்பர்-௴. { இதழ்

[காந்தி பிள்ளைத் தமிழ்]

மறை புகலும் நெறியதனை வடிகட்டி இனிதெடுத்து
மண்ணுலகை மாந்தருய்ய
மாண்பு மிகும் அறநெறியை மாசில்லா ஒழுக்கத்தை
மன்னுதை உடலை நோக்கிப்
பறையரென ஒரு சாரார் பரிகாக்க ஒதுக்குகின்ற
பாதகம் மாள்வழியை இப்
பாராளும் உரிமை இந்நாட்டார்க்கே உளதென்னும்
புண்மைக் கட்குடி விலக்கை
அறை கூவு மாண்பு செறி அருட்கடலைக் குகைக் குன்றை
அணி பெற வீற்றிருக்கருளும் அண்ணலை இங்கிலையில்லா
அரசியலின் வாதி யென்னல்
அறியாமை அறியாமை ஆதலினால் அஞ்சாமல்
அம்புலீஇ ஆடவாவே
அன்பதனால் உலகாளும் ஐயனுயர் காந்தியினோ
டம்புலீஇ ஆட

வேளாளன் கடமை.

(பொன்மார் நடேச முதலியார்)

பண்டைக் காலத்துத் தமிழ் மக்களுள் ஏற்பட்ட அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகையினருள் வேளாளர் என்பவர் ஒருவராவர். வேளாளன் என்னும் மொழி, வேள், ஆளன் என்னும் இரு மொழியாலாய ஒரு தொடர் மொழி யெனக் கொள்ளலாம். வேள் என்பது உபகாரம் எனவும், மண் எனவும் பொருள் படுவதால், வேளாளன் என்பதற்கு உபகாரம் செய்பவன் என்றும், பூமியைத் திருத்தியுழுதும், உழுவித்தும் வாழ்பவன் என்றும் விரி பொருள் கூறலாம். எனவே எவ்வகையானும் பிறர்க்கு உபகாரம் புரிவதே வேளாளனது சிறந்த கடமையாம் என ஏற்பட்டது. உபகாரம் செய்வது மக்களாவார் பலர்க்கும் பொதுக் கடமையா யிருப்பினும், இவனுக்கு அது சிறப்பாக வகுக்கப்பட்டிருக்கிறது. இல் வாழ்வானுக்குப் பொதுவாகக் கூறிய தென்புலத்தார்கடன், பிதிர்க்கடன், விருந்தோம்பல், உறவினரை உபசரித்தல், தன்னைக்காத்தல் ஆகிய ஐந்து கடமைகளுள் விருந்தோம்பல் வேளாளனுக்கே சிறப்புக் கடமையாக விதிக்கப்பட்டிருக்கிறது.

"வேளாள னென்பான் விருந்திருக்க
வுண்ணுதான்" என்று ஆன்றோரும்

வரையறுத்துக் கூறிப்போந்தனர். பரஞ்சோதி மாமுனிவரும் தாமியற்றிய திருவிளையாடல் என்னும் நூலில் விருந்தோம்பல் வேளாளனுக்கே இன்றியமையாக் கடமையென விளக்கி யிருக்கிறார். மற்ற வருணத்தாருக்கு சிறப்புக் கடமைகள் இன்னவை யென விளக்கி வேளாளருக்கு இதை சிறப்பாக விளக்கியது கவனிக்கத் தக்கது.

"வருவிருந்தெதிர் கொண்டேற்று மலர் முகமினிது காட்டி
யருமைசால் முகமன்கூறி அறுசுவையுண நன்கூட்டி
திருமலிகவி முன்னோர்க்குச் செம்பொன் முன்னுனல்கி
பெருமை சான் [illegible] பின்னோர் பொருவி வாழ் தெருக்கள்
[பல்ல" என்றும்,]

220491

'வருவிருந்தெதிர் கொண்டேற்று நயனுரை வழங்குமோசை
யருகிருந்தடிசிலூட்டி முகமனன் கறையுமோசை
யுரைபெறு தமிழ் பாராட்டு மோசை கேட்டுவு வகை துள்ள
இருநிதி யளிக்கு மோசை எழுகடலழைக்கு மோசை" மேலும்,

"அருந்தினர் அருந்திச் செல்ல அருந்து மின்றருமாங்கே
இருந்தினி தருந்தா நிற்க இன்னமுதிட்டுப் பின்னும்
விருந்தினர் வரவு நோக்கி வித்தெலாம் வயலில் வீசி
வருந்திவிண் நோக்கும் ஓரோர் உழவர் போல் வாடி நிற்பார்"

என்றும் கூறும் செய்யுட்களும் இதனை வலியுறுத்தும். இன்னும் அநேக பெரியாரும் இதே கருத்துள்ளவரா யிருக்கிறார்கள். இனி, இவ் விருந்தோம்பலே சிறந்த உபகாரமாகும்.

எவ்வாறெனின் விளக்குதும். இல்வாழ்வானுக்கு விதித்த பொதுக் கடமைகளுள் தென்புலத்தாரும், தெய்வமும், கட்புலனாகாமையின் அவரை நோக்கிப் புரிபவை அத்துணைச் சிறப்பினையுடையன வல்ல. பின்னர் தன்னைக் காத்தலும், சுற்றந்தழுவலும் தன்னயக் கருதியே செய்யப்படுவனவாம். ஆகையின், அவையும் சிறந்த உபகாரத்தின் பாற்படா. இந் நான்கிற்கும் நடு நாயகமாய் விளங்கும் விருந்தோம்பலே பயன் கருதா உபகாரத்தின் பாற்படும். இனி, விருந்து என்னும் பண்பு மொழி முதலில் புதுமையெனப் பொருள்பட்டு, பின்பு புதிதாய் வந்தவர்களைக் குறிக்கும். ஆகையின் விருந்தினர் என்பது பண்டைய அறிவுடைமையினாலோ, அறியாமலோ உதவி நாடி வரும் பலரையும் குறிக்கும். உதவி நாடுபவன், எந்நாட்டினனாயிருப்பினும், எக் கொள்கை, எம்மதம் கொண்டவனாயிருப்பினும், எக் குலத்தவனாயிருப்பினும், ஒன்றையுங் கருதாது அவற்கு உதவிபுரிவதே விருந்தோம்பல் எனப்படும். இவ் விருந்தினரையே வடநூலார் அதிதிகள் என்பர்.

இத்தகைய உதவி புரிவதற்கு அவரவர் தொழிலும் முக்கியமானது. கைம்மாறு கருதாது உதவி புரியும் வழக்கம் உழவுத் தொழிலினர்க்கே இயற்கையாயிருந்த தென்பது வெளிப்படை. நம் உழவு

தொழிலால் பெருக்கிய தானியத்தைத் தன்னகம் சேர்ப்பதற்கு முன்பே ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டிய தானியத்தைப் பகிர்ந்து கொடுப்பது வழக்கமாயிருந்தது. ஒவ்வொரு தானியக் குவியலையும் அளவிடுங்கால் தருமதானியம் செலவிடப் பட்டே தீரல் வேண்டும். தற்கால உழவர்களில் பலர் அவ்வழக்கத்தை முற்றும் மறந்து விட்டபடியால் அவர்களுக்கு இது ஒரு புதுமையாகவே தோன்றும். அன்றியும், வேளாளன் மேற்கொண்ட உழவுத் தொழில், பிறர்பொருட்டுச் செய்யப்படுவதென்றும், தனக்குரியரல்லராய் பிறர்க்குரியராய் வாழ்வதே அதன் முக்கிய நோக்கமென்றும், கருதப்பட்டு வந்தது. ஒருவனிடம் தொழுது உண்ணாமல் சுயேச்சையாயிருப்பதும் அதன் முக்கிய நோக்கமாகும்.

இஃதன்றியும், வேளாளன் என்பவன் சத்தியம் தவறாதவனாயிருத்தல் வேண்டும். இச்சத்தியமும் எல்லோர்க்கும் உரிய பொது ஆபரணமாக இருப்பினும், இவனுக்குத் தொன்று தொட்டு வந்த சிறப்புக் குணமென்றே கருதப்படுகிறது. ஒரு காலத்தில் ஒரு பாண்டியன் மேகங்களைச் சிறையிட்ட காலத்து, மேக ராஜனை இந்திரன் சில நன்மை புரிவதாய்ச் சொல்லி தன் மேகங்களைச் சிறை தவிர்க்க வேண்டிய போது, அவ்விந்திரன் வார்த்தையை பாண்டியன் நம்பினானில்லை; "பாகசாதனனுக்கு நட்டவன் ஒரு வேளாளன் தான் பிணை யென்று தாழ்ந்தான்". உடனே அவ் வேளாளன் சொல்லை மறைமொழியாகக் கொண்டு மேகங்களைச் சிறைநீக்கினன் என்ற விருத்தாந்தம் வேளாளரது பூர்வீக சத்திய நிலையை வற்புறுத்துகிறது.

"முடங்கல் கொண்டணைந்தது தன்முடிகொழு வேந்தன் பாதத்
தொடுங்கி நின்றோலை நீட்ட, வுழையுளா னொருவன் வாங்கி,
மடங்கலேறனையான் முன்னர் வாசித்துக் காட்டக் கேட்டு
விடங்கலுழ் வேலான் விண்ணோர் வேந்தனை நோக்கி"

"இட்டவன் சிறையை நீக்கி யெழிலியை விடாதுமாறு
பட்ட சிந்தையனேயாகப் பாகசாதனனுக் கென்று
நட்டவனொரு வேளாளனைப் பிணை யென்று தாழ்ந்தான்
மட்டவிழ்ந் தொழுகு நிம்ப மாலிகை மார்பினானும்."

"இடுக்கண் வந்துயிர்க்கு முற்ற மெய்தினும் வாய்மை காத்து
வடுக்களைந் தொழுகுதாலா மரபினொருவனையை யாத்த
னெடுத்துரை மறைபோற் சூழ்ந்து சிறைக் களத்திட்ட யாப்பு
விடுத்தனன் பகடுபோல நீண்டன மேக மெல்லாம்." என்பன

கவனிக்கற்பாலன. பழையனூர் நீலி யென்பவளுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற எழுபது பேர் உயிர் விட்ட சரிதமும் கண்டு கவனிக்கற்பாலது.

"மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகனுயிரிழப்பத் தாங்கள், கூறிய சொல் பிழையாது துணிந்து செந்தீக்குழியில் எழுபது பேர்; முழுகிக் கங்கை, யாறணி செஞ் சடைத்திருவாலங் காட்டப்பரண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ் மெய்ப், பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற் பிரித்தளவிட்டிவளவெனப் பேசலாமோ" என்றார் உமாபதி சிவமும்.

ஆகையால், வேளாளர்கள், பிறர்க்குதவி செய்பவராய், சத்தியம் தவறாதவராய், கடவுள் வழிபாட்டையும் மேற்கொண்டு, ஒழுக்க சீலராய் வாழ்ந்து வந்தார்களென்று தெள்ளிதின் புலப்படுகின்றது. நாமும் அவ்வாறே ஒழுகி வாழ்வோமாக.

பாசுரப்படி ஸ்ரீராமாயணம்.

[ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை அருளியது]

திருமடந்தை மண்மடந்தை இருபாலுந் திகழ நலமந்தமில்லதோர் நாட்டில் அந்தமில் பேரின்பத் தடியரோடு எழுலகுந் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும் அமரர்கள் அதிபதியான அணியார் பொழில் சூழ்ந்த நகர் அப்பன், அலை நீர் கடலுள் அழுந்தும் நாவாய் போல் ஆவாரார் துணையென்று துலங்கும் நல்லமரர் துயர் தீர, வல்லரக்கர் இலங்கை பாழ்படுப்பதற்கெண்ணி, மண்ணுலகத்தோருய்ய, அயோத்தியென்னும் மணிநகரத்து வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்க் கௌசலை தன் குலமகளாய், [illegible] யத் தோன்றி, குணந்திகழ் கொண்டலாய், மந்திரக் [illegible]

மறை முனிவன் வேள்வி காக்க நடந்து, வந்தெதிர்ந்த தாடகை தன்னுரத்தைக் கீறி, வல்லரக்கர் உயிருண்டு, கல்லைப் பெண்ணாக்கி, காரார் திண் சிலையிறுத்து, மைதிலியை மணம் புணர்ந்து, இருபத்தோர் காலரசுகளைக் கட்ட மழுவாளி வெவ்வரி நற் சிலை வாங்கி வென்றி கொண்டு. அவன் தவத்தை முற்றுஞ்செற்று, அம்பொனெடு மணிமாட வயோத்தியெய்தி, அரியணைமேல் மன்னனாவான் நிற்க, கொங்கைவன் கூனி சொற்கொண்ட கொடிய கைகேசி சொற்கேட்டு, மலக்கியமா மனத்தனனாய் மன்னவனு மறுதொழிய குலக்குமரர் காடுறையப் போவென்று விடை கொடுப்ப, ஈன்றெடுத்த தாயுரையும் இராச்சியமு மாங்கொழிந்து, மைவாய் களிறொழிந்து, மாவொழிந்து, தேரொழிந்து, கலனணியாதே காமரெழில் விழலுடுத்து, அங்கங்கள் அழகு மாறி, மானமருமென்னோக்கி வைதேகி யின்துணையாய், இளங்கோவும் வாளும், வில்லுங்கொண்டு, பின்செல்ல, கலையுங்கரியும் பரிமாவுந்திரியுங் கானங்கடந்து, பணியுடை குகன் தங்கு கங்கை தன்னைக் கடந்து வனம் போய் புக்கு, காயொடு நீடு கனியுண்டு, வியன் கானல் மரத்து நிழல் கல்லணை மேற் கண்டுயின்று, சித்திர கூடத்திருப்ப, தயரதன்றான் நின் மகன் மேல் பழிவிளைத் திட்டு என்னையும் நீள் வானிற் போக்க என் பெற்றாய் கைகேசி? நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேனென்று வானேற, தேனமரும் பொழிற்சாரல் சித்திர கூடத்தானை, புரவித் தேரோடு காலணி கொண்ட சேனை சுமந்திரன், வசிட்டருடன், பரத நம்பி பணிய, தம்பிக்கு மரவடியை வான்பணையம் வைத்து, குவலயத் துங்கக்கரியும், பரியு மிராச்சியமு மெங்கும் பரதற்கருளி, விடை கொடுத்து, திருவுடைய திசைக்கருமந் திருத்தப் போய், தண்டகாரணியம் புகுந்து, மறைமுனிவர்க்கு அஞ்சேல்மின், என்றருள் கொடுத்து, வெங்கண் விறல் விராதன் உகவிற்குனித்து, வண்டமிழ் மாமுனி கொடுத்த வரிவில், வாங்கி புலர்ந்தெழுந்த காமத்தால் சீதைக்கு நேராவனென்ன பொன்னிறங்கொண்ட சுடுசினத்த சூர்ப்பணகி கொடிய மூக்குங் காதிரண்டுங் கூரார்ந்த வாளால் இராவெடுத்து,

கரனோடு தூடணன்றன் உயிரை வாங்கி, அவள் கதறித் தலையிற் கை வைத்து, மலையிலங்கை யோடிப்புக, கொடுமையிற் கடுவிசை அரக்கன், அலைமலிவேற் கண்ணாளை அகல்விப்பதற்கு, ஒருருவாய் மானை யமைத்து, செங்கற் பொடிக்கூறை சிற்றெயிற்று முக்கல் மூன்று தண்டத்தனாய் வஞ்சித்து, இலைக்குரம்பில் தனியிருப்பிற் கனிவாய்த் திருவினைப் பிரித்து, நீள்கடல் சூழரக்கர் குடிக்கு நஞ்சாகக் கொண்டு போய் வம்புலாங் கடிகாவில் சிறையாய் வைக்க, அயோத்தியர் கோன் மாயமான் மாயச்செற்று அலைமலிவேற் கண்ணாளை யகன்று தளர்வெய்தி, சடாயுவை வைகுந்தத் தேற்றி, இரவும் பகலுங் கண்டுயிலிலாக் கானகம்படியுலாவி, கணையொன்றினால் கவந்தனை மடித்து, சவரிதந்த கனியுகந்து, மருவு கவியரசன் காதல் கொண்டு மராமரமேழெய்து, உறுத்தெழு வாலி மார்பிலொரு கணையுருவ வோட்டி, கருத்துடைய தம்பிக்கின்பக் கதிர்முடி யரசளித்து, வானரக் கோனுடனிருந்து, வைதேகி தனைத்தேட விடுத்த திசைக் கருமம் திருத்தித் திறல் விளங்கும் மாருதியும் மாயோன் தூதுரைத்தல் செப்ப, சீராருந்திறல் அனுமன் மாக்கடலைக் கடந்தேறி, மும்மதிளிலங்கை புக்கு, கடிகாவில், வாராரு முலை மடவாள் வைதேகி தனைக்கண்டு, 'நின்னடியேன் விண்ணப்பங் கேட்டருளாய்! அயோத்தி தன்னில் ஓரிட வகையில் எல்லியம் போதினிதிருத்தல் மல்லிகை மாமலை கொண்டலங்கரித்துங் கலக்கியமா மனத்தினளாய் கைகேசி வரம் வேண்ட, மலக்கியமா மனத்தினனாய் மன்னவனு மறுதொழிய குலக்குமரர் காடுறையப் போ என்று விடை கொடுப்ப, இலக்குமணன் தன்னோடும் அங்கேகியதும், கங்கை தனிற் கூரணிந்த வேல் வலவன் குகனோடு சீரணிந்த தோழமை கொண்டதுவும், சித்திர கூடத்திருப்ப பரதநம்பி பணிந்ததுவும், சிறு காக்கை முலை தீண்ட, மூவுலகுந் திரிந்தோடி, வித்தகனே, இராமாவோ, நின் அபயம்' என்ன அத்திரமே யதின் கண்ணை யறுத்ததுவும், பொன்னொத்த மானொன்று புகுந்தினிது விளையாட, நின் அன்பின் வழிநின்று, சிலை பிடித்தெம்பிரான் ஏக, பின்னை யங்கிலக்குமணன்

பிரிந்ததும், அயோத்தியர் கோனுரைத்த அடையாளம் இது, அவன் கை மோதிரமே யென்று அடையாளம் தெரிந்துரைக்க, மலர்க் குழலாள் சீதையும் வில்லிறுத்தான் மோதிரங்கொண்டு, அநுமான் அடையாளம் ஒக்கு மென்று உச்சி மேல் வைத்துகக்க, திறல் விளங்கு மாருதியும் உயர் கொள்மாக் கடிகாவை யிறுத்து, காதல் மக்களுஞ் சுற்றமுங் கொண்டு, கடியிலங்கை மலங்க வெரித்து அரக்கர் கோமான் சின மழித்து, மீண்டு, அயோத்தியர் கோன் களிர்புறையு மடியிணைப் பணிய, கான வெண்குரங்கு மூசும் படையாய் கொடியோ னிலங்கை புகலுற்று, அலையார் கடற்கரை வீற்றிருந்து, செல்வ விபீடணர்க்கு நல்லானைப், விரி நீரிலங்கை யருளி, சரண்புக்கு அலை கடலை அடலம்பால் மறுக வெய்து, கோல் விலங்கு பணி செய்ய மலையாலணை கட்டி, மறு கரை யேறி, இலங்கை பொடியாகச் சிலை மலி செஞ்சரங்கள் செலவுற்று, கும்பனொடு நிகும்பனும் பட, இந்திரசித்தழிய, கும்பகருணன்பட, அரக்கராவி மாள, அரக்கர் கூத்தர் போல் அக்குமணி தூர மாட, இலங்கை மன்னன் முடி யொரு பத்தும், தோளிருபதும் போயுதிரச் சிலை வளைத்துச் சரமழை பொழிந்து கரந்துணிந்து, வெற்றி கொண்ட செருக்களத்து அடிக் கமல நான் முகனும், கண் மூன்றத்தானும், எண்மர், பதினொருவர், ஈராறுவர், ஓரிருவர், மற்றுமுள வானவர் மலர் மழை பொழிந்து, மணிமுடி பணிதர வடியிணை வணங்க, கோலத் திருமா மகளோடு செல்வ விபீடணன் வானரக் கோனுடன் இலகு மணி நெடுந் தேரேறி, சீரணிந்த குகனோடு கூடி, அங்கனொடு மதில் புடை சூழ் அயோத்தி யெய்தி, நன்னீராடி, பொங்கிள வாடை அரையிற் சாத்தி, திருச்செய்ய முடியு, மாரமுங் குழை முதலாமேதகு பல கலனணிந்து, சூட்டு நன் மாலைக ளணிந்து, பரதனும், தம்பி சத்துருக்கனு மிலக்குவனோடு, இரவு பகலு மாட் செய்ய; வடிவு இணையில்லா சங்கு தங்கு முன்கை நங்கை மலர்க் குழலாள் சீதையுங்தானும், கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து, ஏழுலகுந் தனிக்கோல் செல்ல வாழ் வித்தருளினார்.

குறிப்பு :— ஸ்ரீராமபிரானைக் குறித்து ஆழ்வாராதிகள் பல வேறு சமயங்களில் பலவேறு பாசுரங்களில் அருளிய சொற்களே யன்றி, பிற வார்த்தைகளேனும் ஷை ராமாயணத்தில் இல்லை. இவ்வாறு பிற பெரியார் மணி வாயினின்று சிதரிப் பரவிய சொன்மணிகளை, தன் சொல் லொன்றேனும் கலவாமல் கோவையாகத் தொகுத்தலும், அதிலும் ஓரே வாக்கியமாக்கி சூட்டலும், எத்தகைய அருமையுடைய தென்பதை வாசகரே உணர்வாராக.

"வித்யானந்தன்" மேட்டுப்பாளையம்.

திரு முருகாற்றுப்படை—உரை நடை.

[பண்டிட் ம. சி. சபாபதி முதலியார்]

137ம் பக்கத் தொடர்ச்சி.

குன்று தோறாடல்.

மலைகள் தோறும் கானவர் குறவைக் கூத்தாட, அதனைக் கண்ட முருகப் பெருமான், மெய் தீண்டி விளையாடுதற்குரிய மகளிருங் குறவைக்கூத்தாடி அசைய, அதனைப் பார்த்த பெருமான், கண்ணியை சூடித்தன்னைப் பாடும் மகளிரோடு தன்னைச் சேவிக்கும் மகளிர் தன்னைச் சேவிக்க, அம்மெய் தீண்டி விளையாடுதற்குறிய மகளிரின் கைகளைத் தழுவி எடுத்து, முழுவைப் போன்ற தன் கையைக் கொடுத்து, ஆடிநிற்றலும் அவன் நிலைபெற்ற குணமாகும்.

கானவர் சிறப்பு:— தங்கள் வலிய வில்லால் கொல்லுதலாகிய கொடிய தொழிலைச் செய்கிறவர்கள். நீண்ட மூங்கிற் குழாயில் முதிர்ந்த தேனாற் செய்யப் பட்ட மதுத் தெளிவை சேர்த்து வைத்திருப்பார்கள். அத்தெளிவை மலையிடத்துள்ள சிறு ஊர்களிலிருக்கும் தங்கள் சுற்றத்துடன் உண்டு மகிழ்வார்கள். அப்பொழுது அக் குறிஞ்சி நிலத்துக்குரிய தொண்டகமாகிய சிறு பறையின் தாளத்திற்கு ஒப்பக் குறவைக் கூத்தை யாடுவார்கள்.

வேலன் சூடும் கண்ணி :— நல்ல வாசனையுள்ள ஜாதிக்காயை நடுவே வைத்து அழகான புட்டியில் பொதிந்தாற் போன்றதக் கோல மென்னும் கனையயும் கலந்து காட்டு மல்லிகையுடன் வெண் தாளியையும் சேர்த்துக் கட்டின கண்ணியைச் சூடுபவன்.

அவன் கோலம் :— நறிய சந்தனத்தை பூசி நிறம் விளங்கும் மார்பன். சிவந்த மேனியன். சிவந்த ஆடையை உடுத்தவன். சிவந்த அரையையுடைய அசோகின் குளிர்ந்த தளிர் அசையப் பெறுங்காதினன். கச்சையைக் கட்டிக் கழலை யணிந்து, வெட்சி மாலையைச் சூடினவன். வேய்ங்குழலை ஊதி, கொம்பை ஒலித்து, சிறிய பல வாத்தியங்களை வாசிப்பவன். ஆட்டுக் கிடாவைப் பின்னால் விட்டு விட்டு, மயிலை ஏறித் தன் குற்றமில்லாத கோழிக்கொடியை உயர்த்துபவன். தான் விரும்பிய வடிவத்தை யடைவானாகலின், பிள்ளையாய் இராமல் நீண்ட பெரிய உருவங்கொண்டு வளருபவன். இடையில் இருகக் கட்டிய உதர பந்தனத்தை யுடையவன். குளிர்ந்த வாசனையுள்ள தன் மேன்மையானது சில நிலத்தில் புரளும்படி தொங்க விட்டு உடுப்பவன். முழவை ஒத்த பெரிய கையையுடையவன்.

மெய் தீண்டி விளையாடுதற்குரிய மகளிர் :— மேன்மைத் தன்மை பொருந்திய தோள்களை யுடையவர்கள். பல மான் பிணைகள் சேர்ந்திருத்தலை யொத்த தோற்றத்தை யுடையவர்கள்.

பாடுமகளிர் :— யாழிசையை ஒத்த குரலை யுடையவர்கள்.

சேவிக்கும் மகளிர் :— மயில் போலும் சாயலையும், மடப்பம் பொருந்திய ஒழுக்கத்தையு முடையவர்கள். ஆழ்ந்த சுனையில் இருக்கும் அரும்புகளை இயற்கையாக மலர விடாது விரலாலலைத்துச் செயற்கையாக மலரச் செய்து, செயற்கை மணங்கமழ்கின்ற பூவால் செய்யப்பட்டு வண்டு வீழ்கின்ற மாலையைத் தலையில் சூடினவர்கள். மலரிதழ்களால் கட்டப் பெற்ற மாலையைக் கூந்தலில் சேர்ப்பவர்கள். பெரிய குளிர்ந்த அழகான தழையை வடங்கள் அழகு பெறச்செய்யும் அல்குலிடத்தே அசையும் படி உடுப்பவர்கள். அத்தழை எத்தன்மைத் தென்றால் கஞ்சங்குல்லைத் தழையும், வேறு

தழைகளையுடைய பூங்கொத்துக்களும், செங்காலையுடைய கடம்பினது வெண்மையான கொத்துக்களும் நடுவே வைத்துக் கட்டப் பெற்று வண்டுகள் தேனையுண்ணும் படி தொடுத்த தழை.

நச்சுப் பொய்கை.

II

காப்பி

டாக்டர் D. ஸ்ரீனிவாசன் A. B. (All-Ind) A. M. A. C., (Mad)

பிறப்பும், பரப்பும்.

காப்பி என்னுமிச்சொல், பலம், ஊக்கம் என்று பொருள்படும். 'கூவத்' என்னும் அராபிப் பதத்தினின்று தோன்றிய தென்றும், எனவே பலம் அல்லது ஊக்கந் தருவது காப்பி என்பதன் அருத்தமாகுமென்றும், ஆங்கில அகராதி ஆசிரியரான ரிச்சர்ட்சுல் என்பார் தமது நூலின் 103 பக்கத்தில் குறித்துள்ளார். அமங்கல வாரத்திற்கு மங்கல வார மென்பது போல பல ஊக்கங்களை அழித்தல் செய்யும் இவ்விஷப் பொருட்கும் மங்கள மொழி வழக்காக ப்பெயரெய்தியது போலும்!

இதற்கு அராபியில் Cahwa காவா, துருக்கியில் Cahveh காவே, டச்சில் Caffij காப்பிஜ், பிரான்சில் Cafe காபி, ஜர்மனியில் Kaffee காப்பி, எனவும் பெயருண்டாம். இவற்றிலிருந்தே காபி Coffee ஆங்கிலப் பதமும் போந்ததாம். இவ்வாங்கில மொழி, சற்றேனும் உருச்சிதையாமல், இன்று தமிழ் மொழியாகி வழங்கிவருவது வெளிப்படை. எனவே இக்காப்பி அரபி வனத்திற் பிறந்து, துருக்கியில் கிடந்து, டச்சிலே இருந்து, பிரான்சில் தவழ்ந்து, ஜெர்மனியில் நின்று, இங்கிலாந்தில் நடந்து, ஆவலுடனே இந்தியாவிற் புகுந்து, சிறப்பாக தென்னாட்டவரை நாடோறு மூக்கிட்டு, முத்திட்டு குலவி வளர்கிறது. வெள்ளையரின் புறக்கோலத்தை நோக்கி இழிந்தாரே இதனை முதன் முதலில் கைக்கொள்ளத் துவக்கினர். பின்னர் ஆங்கிலக் கல்வி பயின்று, தம்மறிவைப் பறி

டுத்தாரும், நிழலி லமர்ந்து, 'கௌரவமான குமாஸ்தா' தொழில் புரிவோரும், உழைப்பின் மிகுதியால் தளர்வுற்ற தம் நரம்புகளுக்கு, ஊக்க மூட்டுவதற்கென, இதனை உட்கொள்ள விரைந்தனர். கற்றோரைப் பின் பற்றல் மற்றவரின் இயற்கை விருப்ப மன்றோ?

இப்புதுப் பானத்தில் மக்கள் மனம் படிவதைக் கண்ட வர்த்தகக் கூட்டத்தாரும் 'இதுவே தக்க சமய' மென்ன 17 வது நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தீவிரமாக இதனை விளம்பரப் படுத்தலாயினர். முதன் முதலில் இதனை இனாமாகவும், சொற்ப விலைக்குரிய சிறு பொட்டணங்களாகவும் விற்று, இதன் பெயரையு மறியாப் பாமரர்களுள்ளும் வேட்கையைக் கிளப்பினர். பின்னர், படிப்படியாக, இன்றுள்ள கொடும் விலைக்கு அதனை உயர்த்தினராயினும், மக்கட்கு அதன் மாட்டுள்ள காதல் குறைந்த பாடில்லை. இத்தாலியிலுள்ள ரோவர்டோ என்னும் ஊரில் ஒருவன் தன் அழகிய மோட்டார் ரதத்தை பத்தாயிரம் கோப்பை காப்பிக்காக விற்று விட்டான்' என அண்மையில் வெளிப் போந்த செய்தி உணர்த்துவதென்ன? ஒருவேளை காப்பிக்காக ஓர் நாள் உணவையும் இழக்க ஒருப்படு மிந்திய மக்கள் எத்தனை பேர் இன்று நம்மிடை இல்லை?

எவர் எக்கேடுறினும் பொருளீட்ட மொன்றையே கருத்தாகக் கொண்ட இவ் வர்த்தகருடன் ஒருப்பட்டு நம் இந்திய மக்களின் ஓர் பகுதியினரும் இத்துறையில் முனைந்து நிற்கின்றனர். நகரங்களின் எங்கு நோக்கினும் எவர்க்கும் எளிதில் புலப்படுமாறு பெரிய எழுத்துக்களில் பொறித்த விளம்பரப் பலகைகள் அடிக்கொன்றாக மிளிர்வதே இதற்கு சான்றாகும். தமது குக்கிராமத்தைக் காட்டினும் பிறிதோர் உலகமுண்டோ என ஐயுறும் நாட்டுப்புறத்திலுங்கூட இத்தொத்து நோய் பரவியது. அங்குமொரு ஐயர் காப்பிக் கடை. ஒழுக்கத்தினின்று வழுவியும் உயர் குலத்தவரென வீறு கொள்ளும் நமது பார்ப்பன மக்களே இக் குடிக்குத் தரகர்களாகி, ஏனைய வகுப்பார் அனைவரையுங் கவரு மெண்ணத்தால் 'பிராமணாள் காப்பி கிளப்' என விளம்பரஞ் செய்து, தன்னினத்தவர் வீட்டிலும்

கை நனையா பிற ஜாதியிலுள்ள ஆசார சீலர்களையும் கெடுக்கத் துணிந்தனர். கழுவாது, பல நீசர் எச்சில்களையும் மனந்துணிந்து அவர்க்கு ஊட்டுகின்றனர். உயிர்கள் மாட்டு இவ்வந்தணர்க்குள்ள செந்தண்மை என்னே! என்னே! பாவம்! இவரைத் தூற்றலில் பயன் என்னை? நம்மவர்க்குள்ள இக் காப்பியின் வேட்கையன்றோ இவரை இவ்விழி தொழிலில் இறக்கியது! ஊக்குவது!

கற்றாரும், பிறரும் காலையில் ஒருவரை யொருவர் காணும் போதெல்லாம் 'காப்பி ஆய்விட்டதா?' என இதன் நாம மந்திரத்தை உச்சரித்தே யோக க்ஷேமம் உசாவுகின்றனர். இதிலிருந்தே இக் குடிக்கு நம்மிடமுள்ள ஆதிக்கம் புலப்படுகின்றதல்லவா? இல்லம் நாடிவந்த உறவினருக்கோ, அல்லது நண்பருக்கோ காப்பி வழங்குவதுதான் இற்றை நாளின் உபசரணையின் முதற்படி. பிறகு தான் தாம்பூலம். உபலக்ஷணமாக புகையிலையோ, சிகரெட்டோ, பீடியோ பின் தொடர்கின்றன. தமது மாதுலர் வீட்டில் காப்பி யுண்ணக் கப் பெறாவிடின் அதனை மன்னிக்க முடியாப் பெருங்குற்றம்—அவமானம்—எனக் கருதிப் புகையும் நவீன இந்திய மருகரு முண்டு.

அறுசுவை யுண்டியை முறைப்படி பாகஞ் செய்தூட்டும் ஆற்றலுடையளாயினும், மேனாட்டு கட்டிப் பாலுடன் இக்காகக் காப்பி தயாரிக்க அறியாத நம்மில்லக் கிழத்தியரை, கேவலம் பட்டிக்காடுகளென எண்ணுதலேயன்றி, எரிந்து விழும் நாயக மணிகளு முண்டு. இவற்றை யெல்லாம் கருதித்தானோ பெற்றோர்களும், உபாத்தினிகளும், குஞ்சிறுமியருக்கு 'காப்பி செய்திங்கே வையடி' என்ற முதற் பாடத்தைக் கற்பிக்க முனைகிறார்களோ அறியோம். தன்னிடம் விசேடக் காதல் பூண்ட இம்மாக்களுக்கு இக் காப்பி நல்கும் பரிசினையும், விளைவினையுமோர்வாம்.

காப்பியின் உள்ளுறை பொருட்கள்.

1. காப்பீன் என்பது 75 முதல் 2.05% (Caffeine
2. டானின் 5.0% (Tanin)
3. வாலடைல் தைலம் 12.0% (Volatile oil)

என்னும் முப்பொருட்கள் கூறிய அளவில் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அதன் குணங்கள்.

1. காப்பீன் என்பது இதிலுள்ள சத்துப் பொருள். இதன் உபயோகம் ஜீரண சக்தியை கொடுக்கிறது. தலைவலி மனக்கலக்க மிவைகளை புறக்குறிகளாகக் காட்டி, நரம்பு மண்டலச் செயலுக்கு ஊறு செய்கிறது. இருதயத் துடிப்பு எழுகிறது. இது ஊரு நீரைப் பெருக்கி, உணர்ச்சியைச் செகுத்து, தமக்குரிய பிரதி பல அதிர்ச்சியை வலித்து, மானதச் செயலை கிளர்த்தி, நரம்புகளுக்கோர் ஆறுதலற்ற நிலையை யீந்து, சில சமயங்களில் உறக்க மின்மையை யும் உண்டாக்கலாம். துவக்கத்தில் இருதயத்தை ஊக்கி, அதன் வழி ரத்தக் கொதிப்பை மிகுத்து, விரைவில் இரண்டையும் தளர்த்துகிறது.

Potter's Materia Madica.

"மிஞ்சிய அளவின் இச்சத்து, பிரதி யொலிக்கும் வலிப்பை சிறப்பாக கிளர்த்தி, கைகால்களில் பிடிப்பு, நடுக்கத்துடன் கூடிய முடக்கு, வாதம் ஆகந்துக (புறக் காரணங்கள்) நோய்க் குரிய அந்தர் பஹிர் வாதங்களையும் தோற்ற வல்லது' National Standard Dy'

"காப்பீன் என்பது கடுமையான விஷமென பல வாண்டுகளுக்கு முன்னரேதான் நிறுவியதோடு, 2 முதல் 10 குன்றி எடையுள்ள அது, உணர்ச்சி, காரிய நரம்புத் தொகுதிகளுக்கு கடுமையான விதிர்ப்பையும், இருதயத் துடிப்பு, அசாதாரண விரைந்த சீர்கெட்ட, தடை பட்ட நாடி ஓட்டத்தையும், மாரடைப்பு, சிரோவேதனை, பஞ்சேந்திரியக் கலக்கம், காதிரைச்சல், கண் முன் பூச்சி பறத்தல், தூக்க மின்மை, சித்த விகாரம்" முதலியவற்றையும் உண்டாக்குகிற தென ரசாயன சாத்திர நிபுணரான லெய்மான் கண்டு பிடித்துள்ளார்.

Tanin:— டானின் என்பதோர் மிகவலிமை யுள்ள துவர்ப்புச் சத்து. (கிராஹ்யம்) இது பெப்சின் விஷத்தைத் தோற்றி, முட்டையின் வெண்கரு போன்ற ஆல்ப்யூமன் கொழுமைப் பொருளைக் கட்டிகளாக உறையச்செய்து, விரிந்து சுருங்கும் குடலின் தன்மையைப் போக்கி, மலபந்தத்தை யுண்டாக்குகிறது. வழக்கமான இதன் உபயோகம் ஜீரணக் கோளாறு, உட்புற ஜவ்வின் அழற்சிகளைத் தோற்றி உடலை க்ஷீணிக்கச் செய்கிறது. Food fack, H. S. Anderson.

Volatile oil :— (வாலடைல் தைலம்) "இது ஆமாசய, பக்குவாசய கிளர்ச்சியையும், மிகுந்த அளவின் கடுமையான அயர்ச்சியையும் செய்யும். இவ்வழற்சியின் எதிரொலியாக மத்திய நரம்பு மண்டலமும், இருதயமும் ஊக்கப் பெறுகின்றன. தன்னை உரிஞ்சி, புறத்தகற்றும் சர்மமும் இதனால் தீய்கிறது. தாக்கப்பட்ட சுவாசநாளங்களிலிருந்து கபக் கழிவு மிகுக்கிறது. இக்குழாய்களைச் சுவர்ந்துள்ள தசைநார்களின் கடுமழற்சியால் இருமல் தோன்றுகிறது. பெரும்பாலுந்தன்னை வெளியாக்கும் வருக்கங்கள் மூத்தர மார்க்கமிவற்றை கடுமையாகத் தாக்கி, தூண்டி, வீக்கமுறச் செய்கிறது" Hale-whiles M Midica P. 253.

இவ்வாலடைல் தைலந்தான் டீ, காப்பிக்குரிய மணத்தினையும், சுவையினையும் தருவது. சிற்றளவில் ஊக்கியும், பேரளவில் இருதயத்தை விரைக்கச் செய்வதான 'டிஜிடாலிஸ்' போன்றது இது. Dr L. E. Kress M. D.

(தொடரும்)

எந்த விவாகம் நல்லது?

(C. C. கோவிந்தசாமி நாயுடு,
வித்யானந்த சபையின் கோவை உறுப்பினர்.)

"பழகப் பழக பாலும் புளிக்கும்" என்ற பழமொழியின் உண்மையை நாம் நாடோறும் அனுபவத்தில் காண்கிறோம். எளிதில்

கிட்டாத பொருளின் மீதுள்ள ஆவலைப் போல அருகில் உள்ள வஸ்துவின் மீது நமக்கு ஆசை உண்டாவதில்லை. உதாரணமாக ஒருவன் சர்க்கரையைப் பற்றி அதிக கேள்விபட்டும் அதனை ருசிக்காதவனாயிருந்தால், எப்படியாவது தான் அதை அடைந்து சுவைக்க வேண்டுமென்ற ஆவல் அவனை விழுங்கி நிற்கும். அல்லது, நமக்கு, தெரியாத ஒருவரின் கீர்த்திப் பிரதாபங்களை அடிக்கடி நாம் கேள்வியுறும் போது அன்னாரை எப்படியாவது காண வேண்டும்; நட்புக் கொள்ள வேண்டும் என்ற தணியாத ஆசை யுண்டாகிறது. அப்படி ஆசைப்பட்டு, அதிக சிரமத்துடன் அடைந்த பொருளைத்தான் நாம் மிகவும் அன்பாகவும், ஜாக்கிரதையாகவும் பாதுகாத்து வருகிறோம். இதே காரணத்தை முன்னிட்டுத்தான் ஒருவன் சற்று தூரப் பகுதியிலுள்ள பெண்ணையே இயன்ற அளவு விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்பது. மிக நெருங்கிய உறவினருள், தன் தாய் தந்தையர் ரத்தக் கலப்புள்ள பெண்களை விவாகம் செய்து கொள்வதால் விவாகத்தின் மேன்மையான இன்பத்தை இவன் அடைய முடியாமற் போய் விடுகிறது. ஆகையால் தூர சம்பந்தத்தினாலுண்டாகும் நன்மைகளையும், நெருங்கிய மணத்தால் விளைக்கும் தீமைகளையும் சிறிது காண்பாம். அவற்றுள் சில:—

1. குழந்தைப் பருவ முதல் அடுத்து வசித்தவர், உடன் விளையாடித் திரிந்தவர், அடிக்கடி சண்டை யிட்டவர், காதலித்தவர், ஒருவருடைய இயல்பான குற்றம், குறை, சுபாவம், துர் நடத்தை, சில சமயங்களில் உடையற்ற நிலைமை முதலியவற்றை கண்டவர் ஆகிய மிக நெருங்கிய பழக்கமுடைய ஆண் பெண்கள் விவாகம் செய்து கொள்வதால், பழக்க காரணத்தை முன்னிட்டு ஒருவரையொருவர் அதிகமாக நேசிக்க முடியாமற் போய் விடுகிறது.

2. தண்ணீர் தண்ணீரோடு கலப்பதால் விசேஷமான குணமொன்றும் அதற்கு உண்டாவதில்லை. அதே போல ஒரே வகை ரத்தக்கலப்புடையவர் தமக்குள் தாமே விவாகம் செய்து கொள்ளுவ

தால் திடகாத்திரமான சந்ததி தோன்றுவதற்கு வழியில்லாமல் போகிறது. ஆராயுமிடத்து இதனால் குலக்ஷயமே உண்டாகிறது.

3. சுக்கு, சர்க்கரை முதலிய பிற வஸ்துக்களின் சேர்க்கையால் பாலானது சிறந்த குணத்தையும், நல்ல சுவையினையும் பெறுகிறது. அது போல உடல் மாறுபாடுள்ள தம்பதிகள் கூட்டுறவால் சிறந்த ஆரோக்கியமுள்ள குழந்தைகள் பிறக்கிறார்கள். வம்சமும் சீரிய முறையில் விருத்தியாகிறது.

4. மாறுபட்ட வாசஸ்தானமும் உணவும் அதிக நன்மையைத் தந்து பலவீனனை நல்ல பலவானாக்குவதைப் போல், தூர தேசத்தினர், மிக நெருங்கிய சம்பந்த மில்லாதவர், ஆகியவருடன் செய்து கொள்ளும் விவாகமும், தம்பதிகளுக்கு உடல் ஆரோக்யம், முதலிய பிற நன்மைகளையும் தருகிறது.

5. நெருங்கிய உறவினர் தமக்குள் தாமே விவாகம் செய்து கொண்டு, பந்துக்கள் மத்தியிலேயே வசிப்பதால் ஒரு குடும்பத்தினுடைய சுக, துக்கங்கள் மற்றொரு குடும்பத்தை மிக எளிதில் தாக்குகிறது. குடும்ப சச்சரவுகள் மிக சுலபமாக உண்டாகின்றன. ஆனால், தூர சம்மந்தத்தாலும்—பந்துக்களைப் பிரிந்து இருப்பதாலும்—நமக்குள் பரஸ்பர அன்பும், ஆசையும் அதிகரிக்கிறது. உறவினர் மத்தியில் வசிப்பதால் இத்தகைய அன்பு ஏற்படுவதில்லை. சகலமான வெறுப்பே விளைக்கிறது.

6. பிற தேசத்தாருடனோ அல்லது தூரப் பகுதியினருடனோ சம்மந்தம் கொள்ளுவதால் ஒரு தேசத்திலுள்ள சாமான்—செய்தி முதலியவகைகளை மற்றொரு பகுதியர் சுலபமாகப் பெற வசதி ஏற்படுகிறது. இதனால் சிதறிய பகுதியினர் ஒன்றாக பிணிக்கப் படுகின்றனர். ஆனால், மிக நெருங்கிய உறவினர்—அருகில் வசிப்பவர்—குறுகிய ஓர் வட்டாரத்துள் வசிப்பருடன் விவாகம் செய்து கொள்வதால் மேற்கூறிய சாதனங்களை யடைய முடியாது. இதனால்தான் மகளுக்கு தூஹிதி, அதாவது தூ-- தூரத்திலிருந்து, ஹிதி நன்மையைச் செய்பவள் என்ற பெயரும் வடமொழியில் சூட்டப் பட்டிருக்கிறது.

ஏனெனில், தூரப் பகுதியிலுள்ள ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்ட பெண்ணால் பலவித நன்மைகள் உண்டாகின்றன.

7. புருஷன் வீட்டிலிருந்து நெடுந்தூரத்திலிராமல், தன் தாய் தந்தையர் வீடு பக்கத்திலிருந்தால், பெண்கள் அடிக்கடி தம் பெற்றோர் வீட்டிற்கு வருவதும், போவதுமாக இருப்பார்கள். தன் வீட்டை விட்டுச் செல்லும் போதெல்லாம், ஏதாவது சில சன்மானங்களை கொடுத்தனுப்ப வேண்டி நேரிடும். இல்லா விட்டால் பெண்கள் தாமாகவே பல பொருள்களை எடுத்துப் போக ஆரம்பித்து விடுவார்கள். இதனால், பெற்றோர், அதிக சீக்கிரத்தில் தரித்திரராக வேண்டி நேரிடும்.

8. பெற்றோர் அருகில் வசிப்பதானால், பெண் அடிக்கடி அற்ப காரணங்களுக் கெல்லாம் புருஷனுடன் சண்டையிட்டுக் கொண்டு, பெற்றோர் தன்னை ஆதரிப்பார்கள் என்ற எண்ணத்தால் ஓடி வந்து விடுவாள். இதனால் பெரியவர்களுக்குள்ளும் பரஸ்பரம் மனஸ்தாபம் வளர ஆரம்பிக்கும். ஏனெனின் சந்தோஷப் படுவதை விட மிக விரைவில் சினம் கொள்ளும் சுபாவ முடையவர் பெண்கள்.

9. திடீரென்று தமது வீட்டில் ஏற்படும் சுபா சுபங்களுக்கு, தமது பெண்கள் உடனே வர முடியாது என்ற ஒரு காரணத்தை தவிர்த்து, மற்றெல்லா விஷயங்களிலும், தூர விவாகம் பெரும்பாலும் சிறந்த நன்மை பயக்கும் தன்மையுடையதென்பதை வாசகர் சிந்தித்து உணர்வார்களாக. இதனால், தேசத்தின் பல பகுதிகளில் சிதருண்டு கிடக்கும் ஒரு சமுகத்தார் எவ்வாறு ஒற்றுமைப் படக்கூடு மென்பதையும் உன்னுவார்களாக.

உண்மையறிவதெப்படி?

உலக மறிந்த மிக எளிய உண்மைகளைப் பற்றி இக்காலத்தில் எழும் பேச்சுகளையும், பத்திரிகைகள் வெளியிடும் வியாக்கியானங்களையும் பார்க்கும் போது, இவற்றில் உண்மை எது? என்றறிவதே

பகீரதப் பிரயத்தனமாக இருக்கிறது. ஒவ்வொருவர் கூறும் கூற்றுகளும் ஓரளவு உண்மையெனவே தோன்றுகின்றன. முரண்பாடான கருத்துகளால் மொத்துண்டு நம்மனம் ஊசலாடும் போது, "கல்லாதவர்களோ நல்லவர்கள். நல்லவர்கள் கற்றும், அறிவில்லாதவர், கன்மத்தை என் சொல்வேன்" என்ற அடிகளின் மெய்மை நம்மளவில் சாலப் பொருந்துவதாகவும் காண்கிறது. கற்றதனைத்தும் மறந்து விடுதலென்பதும் எளிதல்ல. ஆதலின், உள்ளத்தைக் கொண்டு உண்மையறிவது எங்ஙனம் என்பதையே சற்று ஈண்டாராய்வோம். கருத்து வேற்றுமைகளால் ஏற்படும் திரிசங்கு சுவர்க்கத்தினின்று நம்மை மீட்க வெண்ணியே நமது வள்ளுவப் பெருந்தகை, 'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு' என இடித்துரைத்தனர். இவ்வாண்டகை நவின்ற மெய்ப் பொருளை எவ்வெச் சாதனங்களால் கண்டு தெளிதல் என்பதை தயானந்த சரஸ்வதியார் வெகு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். அதனையே ஈண்டு தருதும். தங்கத்தை முதலில் நெருப்பிலிட்டு உருக்கி, பிறகதனை உறை கல்லில் தீட்டி, அதன் மாற்று அறிவது போல, நாம் படிக்கும் அல்லது கேட்கும் ஒவ்வொரு விஷயத்தையும் கீழ்கண்ட சோதனை திராவகத்திலிட்டு, அவை நிற்கும் நிலைமைக்குத் தக்க உண்மையுடையதென முடிவு கொள்ளலே அறிவு, என்பதாம்.

I. வேதங்களும், கடவுளின் இயற்கையும் :— புனித வேதோபதேசங்களுக்கு ஒத்திருப்பவையும், கடவுட்டன்மைக்கு உடன் பாடானவையும் உண்மை; மாறு படுவன பொய்.

II. இயற்கை நியதி :— இயற்கைத் தத்துவங்களுக்கு உடன்பாடானவை மெய்; திரிபுடையன பொய். உதாரணமாக, தாய் தந்தையரின் சேர்க்கையின்றி குழந்தை பிறந்தது என்பது இயற்கை நியதிக்கு மாறு பட்டிருப்பதால் அது உண்மையாக முடியாது.

III. ஆப்தரின் அனுபவங்களும், உபதேசமும் :— தெய்வ பக்தி, சீரிய ஒழுக்கம், பக்ஷபாதமின்மை, நேர்மை, நிறைந்த கல்வி முதலியவை பெற்ற உத்தமர்களே ஆப்தர் அல்லது அறிஞர் எனப்

படுவர். இவர்களின் அனுபவ, உபதேசங்களுக்கு ஒத்துள்ளவை ஏற்கத் தகுந்தன. முரணுள்ளவை தள்ளற் பாலன.

IV மனத்தூய்மையும், மனசாக்ஷியின் உறுதியான நம்பிக்கையும் :-

'உனக்கு நல்லது எதுவோ, அது உலகிற்கும் நல்லது: உனக்கு துன்பமீவது எதுவோ, அது உலகிற்கும் தீமை செய்வது' என்ற உத்தமக் கொள்கை, பிறரிடத்து நீ நடந்து கொள்ளும் முறைகளிலெல்லாம் உன்னை முன்னின்று தூண்டுவதாயிருக்க வேண்டும்.

V எண்வகையான சாக்ஷியங்கள் or (பரி சோதனைகள்) :— (1) பிரத்யக்ஷம், (2) அனுமானம், (3) உபமானம், (4) அத்தாக்ஷி, (5) சரித்திரம், (6) அர்த்தபத்தி, (7) சகஜம், (8) எதிர்மறை or இன்மை என்பன. இவற்றை சற்று விரிவுறக் காண்பாம்.

(1) பிரத்யக்ஷம் (i.e) கண்முன் காண்பது :—நமது பஞ்சேந்திரியங்களான மெய், வாய், கண், மூக்கு, செவிகளுக்கு நேர் முகமான சம்பந்த முடையதாய், அவற்றால் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று, அறிவதனால் ஏற்படும் ஞானம், பிரத்யக்ஷ ஞானம் எனப்படும். புலன்களோடு கூடிய மனம், ஆன்மாவுடன் பொருந்திய புத்தி, இவைகளால் அறியப் படுபவையும் இப்பிரத்யக்ஷத்தினுள் அடங்கும்.

(a) ஆனால் இஞ்ஞானம், கேவலம் தண்ணீர் என்ற வார்த்தைக்கும், திரவப் பொருளான வஸ்துவிற்கு முள்ளது போன்ற சாதாரண சம்பந்தா சம்பந்தங்களை மாத்திரம் உணர்த்துவதாய் இருக்கலாகாது. (உ-ம்) உமது வேலையாளை அழைத்து ஜலம் கொண்டுவா என்கிறீர். அவன், அதைக் கொணர்ந்து, முன்பு வைத்து, ஐயா இதோ ஜலம் என்கிறான். இப்பொழுது வேலைக்காரனும் நீரும் ஜலம் என்ற சொல்லைக் காண்பதில்லை. ஆனால் அதனால் சுட்டப்பட்ட ஓர் திரவத்தைப் பார்க்கிறீர்கள். இச்சொல்லுக்கும், பொருளிற்குமுள்ள சம்பந்தத்தை விளக்குவது அத்தாக்ஷி (Testimony) என்ற பிறிதோர் சோதனையாகும்.

(b) இப்பிரத்யக்ஷ ஞானம், தாற்காலிகமானதாயும், மாறுபடுகின்றதாயும் இருக்கலாகாது. அதாவது, தக்க வசதியில்லாத சமயத்து ஓர் பொருளைக் கண்டு, அதன் தன்மையை நிர்ணயிக்கலாகாது. (உ-ம்) ஒருவன் இருட்காலத்தில் ஏதோ ஒரு பொருளைக் கண்டு அதனை மனிதன் என நினைக்கிறான். ஆனால், பொழுது புலர்ந்ததும், அப்பொருளையே கண்டு, அது மனிதனல்லவென்றும், அதோர் தூணெனவும் தெரிந்து, தன் தப்பிதத்தை உணர்கிறான். இப்பொழுது அவனுடைய முதல் நினைவானது தாற்காலிகமானதாயும், மாறுபடும் தன்மையதாகவு மிருந்தது. ஆனால், பகலில் அவ்வஸ்துவின் உண்மைத் தன்மையை அறிந்தவுடன், சந்தேக நினைவு ஒழிந்து, தீர்மானமான எண்ணம் ஏற்பட்டது.

(c) பிரத்தியக்ஷ ஞானம், எள்ளளவு சந்தேகத்திற்கும் இடந்தராததாய் தீர்மான முடிபுடையதாயிருக்க வேண்டும். (உ-ம்) தூரத்திலுள்ள வோர் நதியைக் கண்டு அது ஜலமா அல்லது உலர்த்தப்பட்ட வஸ்திரமா என ஐயுறுகிறாய் or தூரத்திலுள்ள வோர் மனிதனைப் பார்த்து அவன் தேவதத்தனா அல்லது யக்ஞதத்தனா? என யோசிக்கிறாய். எனவே, கண்ணால் ஓர் பொருளைக் கண்டாலும் அதைப் பற்றி உனக்கு நிச்சய ஞானம் ஏற்படும் வரை—சந்தேகம் நீங்கும் வரை—அது பிரத்யக்ஷமாகாது. கடுகளவு சந்தேகமுமின்றி தீர்மானமான அறிவே பிரத்யக்ஷமாகும்.

சுருக்கச் சொல்லுமிடத்து, ஓர் சொல்லுக்கும், அதன்பொருளிற்கும் உள்ள சம்பந்தத்தினால் மாத்திரம் பெறப்படாததும், அல்லது வசதியற்ற நிலைமையில் காண்பதும்—இதுவோ அதுவோ என்று ஐயுறு சம்பத்தும்—ஒன்றைப்பற்றி இம்மியளவு சந்தேக முள்ள போதும் காண்பவை பிரத்யக்ஷமாகாது.

(2) அனுமானம்: or ஊகிப்பது. "நேரிற் காணுமொன்றை தொடர்ந்து வருவது' என்பதின் சொற் பொருள். ஒரே காலத்தில் ஒரே இடத்தில் இரண்டு பொருள்கள் இருப்பதாகக் காண்கிறோம். மற்றோர் சமயத்தில் அவ் இரண்டில் ஒன்றை மாத்திரம் பார்த்து இவ்

லாத பிறிதொன்றைப் பற்றி ஊகிக்கிறோம். (உ-ம்) ஓர் குழந்தையை மாத்திரம் பார்க்கின்றனை. கண்டதும் இம்மகவிற்கு தாய்தந்தையர் இருக்க வேண்டுமென தீர்மானிக்கின்றனை, Or மலைச்சாரிவில் புகை எழுவதை காண்கின்றனை; கண்டதும் அங்கு நெருப்பு இருக்க வேண்டுமென உறுதிகூறுகின்றனை, or கண்முன் ஜீவர்கள் படும் கஷ்ட சுகங்களைப் பார்த்து, இவர்கள் முன் ஜென்மத்தில் இதற்குரிய தீவினை, நல்வினைகளைச் செய்திருக்க வேண்டுமென கருதுகின்றனை.

(நியாய சாஸ்திரம். I. i 5)

இவ்வநுமான ஞானம் மூவகைப் படும்:---,

(a) பூர்வாவஸ்தை:--- காரணத்திலிருந்து காரியத்தை அறிய முயல்வது பூர்வாவஸ்தை எனப் படும். (உ-ம்) "கரிய மேகத் திரட்சியைக் கண்டதும் மழை வரும்—விவாகம் செய்து கொண்ட தம்பதிகளைக் கண்டதும், இவர்கள் ஒரு காலத்தில் மக்களைப் பெறுவர்--கஷ்டப்பட்டு படிக்கும் சிறுவர்களைக் கண்டதும் இவனோர் காலத்து சிறந்த வித்வானுவான்" என அனுமானிப்பது.

(b) சேஷாவஸ்தை:--- காரியத்திலிருந்து காரணத்தைத் தேடி அறிவது சேஷாவஸ்தை யெனப் படும். (உ-ம்) வெள்ளம் பெருக்கெடுத்தோடுமோர் நதியைக் கண்டதும், இதன் உற்பத்தி இடமான மலையில் மழை பெய்திருக்க வேண்டும்--குழந்தையைப் பார்த்து, இதற்கு தாய் தந்தையர் இருக்க வேண்டும்--உலகத்தைப் பார்த்து, இதனை ஆக்கவோர் பெருஞ் சக்தியும், தூல பொருட்களுக்குக் காரணமான சூக்கும பூதங்களுமிருக்க வேண்டும்--இன்ப துன்பங்களில் கிடந்து உழலும் ஜீவனைக் கண்டதும், இது கடந்த பிறவியில் இதற்கேற்ற காரியங்களை செய்திருக்கச் வேண்டுமென நிச்சயிக்கின்றனை. ஏனெனில், தீமை செய்வதற்கு தண்டனையும், நன்மை செய்வதற்கு சன்மானமும் கிடைப்பதை, உன் அனுபவத்திலேயே நீ கண்டிருக்கின்றனை.

(c) சாமான்யதோர் திருஷ்டி:---அறிந்தவோர் பொருளுக்கும், ஊகிக்கப் பட வேண்டிய வஸ்துவிற்கும், நேர் முகமான காரணத்தை

நாமறியா விட்டாலும் இரண்டிற்குமுள்ள சில ஒப்பு வுவமைகளைக் கொண்டு மற்றதை யறியும் ஞானத்திற்கு, 'சாமான்யதோர் திருஷ்டி' என்று பெயர். (உ-ம்) ஒருவன் தன்னிடத்தை விட்டு நகர்ந்தாலன்றி பிரிதோரிடத்திற்கு செல்ல முடியாது என்ற சாதாரண உண்மையை நீயறிவை. ஆகையால் ஓரிடத்தில் இருக்க வேண்டிய ஒருவன், மற்றோரிடத்தில் இருப்பதாகக் காணும் போது, (அவன் நகர்ந்ததை நீ நேரிற் காணா விடினும்) அவன் அவ்விடத்திற்கு அவசியம் நடந்து சென்றிருக்க வேண்டுமென உணர்கிறாய்.

3. உபமானம்:---அறிந்தவோர் பொருளின் குணகுணங்களைக் கொண்டு, அதே குணங் குறிகளுள்ள பிறிதோர் பொருளை அறிதலுக்கு உபமானம் எனப் பெயர். அறிய வேண்டிய பொருளிற்கு 'சாத்யம்' (உபமேயம்) எனவும், அறிவதற்கு துணை செய்யும் பொருளிற்கு 'சாதனம்' (உபமானம்) எனவும் பெயர் தந்துள்ளார்கள். (உ-ம்) "சென்று விஷ்ணுமித்திரனை அழைத்து வா" என ஒருவனுக்கு கட்டளை இடுகின்றனை. அவன், ஐயா, நான் அவனை முன்பின் பார்த்ததில்லை, ஆதலின் அறியேன்! என்கிறான். சரி, தேவதத்தரை தெரிவையன்றோ? எனவும் 'ஆம்' என்கிறான். தேவதத்தரைப் போலவே அவர் இருப்பார். சென்று அழைத்துவா என்கின்றனை. அவன் சென்று தேவதத்தனைப் போன்று அவ்வழியில் வந்த விஷ்ணு மித்திரனையே அழைத்து வந்து விடுகிறான். இந்த விஷ்ணு மித்ரன் உபமேயம் (சாத்யம்), தேவதத்தன் உபமானம் (சாதனம்).

4. அத்தாக்ஷி:---சப்தம்:---இதற்கு வார்த்தை யென்பதே சொல்லருத்தம். ஆப்தர்களுடைய வார்த்தைகளே அத்தாக்ஷி யென நியாய சாஸ்திரம் 1, i, 7 பகுதி கூறுகிறது. ஐயம் திரிபறக் கற்றவன் தேசமானத, கலாசமய ஞான தேர்ச்சி, சத்தியம், சுறுசுறுப்பு, காமாதி குணங்களின்று நீக்கம், எல்லோரிடத்தும் அன்பு, தன் கல்வி, அனுபவ, முடிவுகளை மக்கள் முன்னேற்றத்திற்கெனவே உபயோகிப்பவன், பொது ஜன சேவைக்கெனவே உயிர்வாழ்தல் ஆகிய அருங்குணங்களஞ்சியமாய் உள்ளவரே ஆப்தர் எனப்படுவர். இவ்வாராய ஆப்-

தார்கள் பகரினும், சத்திய நேர்மை வடிவான சர்வேஸ்வரனே சிறந்தவனுவான். ஆகையால், அவன் அருளிய வார்த்தைகளான வேதங்களும் இவ்வாப்தத்திலுள் சேர்க்கப் பட்டிருக்கிறது.

5. இதிகாசம்:---இன்னின்ன மனிதன் இவ்விவ்வகையாக வதிந்து இன்னின்ன காரியங்களை செய்தார் என தெரிவிப்பது, இதிகாசமாகும். அதாவது, ஒரு நாட்டாரின் or ஒரு மனிதனின் வாழ்க்கையை சரித்திர ஆதாரங்களோடு காட்டுவது சரித்திரம் or இதிகாச மெனப்படும். சரித்திர பூர்வகமான நடந்த கால அனுபவங்கள், நிகழ் காலத்துள்ள சிக்கலான விஷயங்களில் முடிவு காண உதவி செய்யக் கூடுமென்பதே இதன் நோக்கம்.

6. அர்த்தபத்தி:--- தீர்மானம். கையிலுள்ளதோர் விஷயத்தைக் கொண்டு, இயற்கையான தீர்மானத்திற்கு வருவது அர்த்தபத்தி or இயற்கைத் தீர்மானம் எனப்படும். (உ-ம்) "மேகத்திலிருந்து மழை பெய்கிறது or காரணத்திலிருந்து காரியம் உண்டாகிறது என ஒருவன் சொல்லுவதாக வைத்துக் கொள்வோம். மேற் கூற்றிலிருந்து சாதாரணமாக பெறப்படுந் தீர்மானம் யாதெனில், மேகமில்லையாயின் மழையுமில்லை; காரணமில்லையாயின் காரியமுமில்லை" என்பதே. இதனைத்தான் இயற்கையான முடிவு என்பர்.

7. சம்பவம் or சகஜம். எவ்விஷயத்தை ஒருவன் கேள்வியுறும் போதும், இக்காரியம் உண்மையில் நடந்திருக்குமா? இது சகஜமானது? என்பதே முதன் முதலில் அவன் மனத்தில் புகுகிறது. இயற்கை நியதிக்கு முரண் பாடானவை சகஜமாக நடந்திருக்க முடியாது. ஆதலின், அத்தகைய செய்தியும் உண்மையாக விருக்க இயலாது. (உ-ம்) "தாய்தந்தையர் உறவின்றி ஓர் குழந்தை பிறந்தது; இன்னார் இறந்தவனை உயிர்ப்பித்தார்; நீரின்மேல் கற்களை மிதக்கச் செய்தார்; மலைகளைத் தூக்கினன்; மனிதன் தலையில் கொம்பு முளைத்திருக்கிறது; இவ்விவாக தம்பதிகள் மலடுக்குப் பிறந்தவர்கள்;" என ஒருவன் கூறுவானுயின், இயற்கை நியதிக்கு மாறுபட்ட இவை

பொய்யெனத் தள்ள வேண்டும். ஏனெனில் அத்தத்துவங்களுக்கு உட்பட்டவைதான் சகஜமாக இருக்க முடியும்.

8. அபாவம்---இன்மை---ஓரிடத்தில் இருக்க வேண்டிய பொருள் அவ்விடத்தில் இல்லையானல்—காணப்படா விட்டால் அது மற்றெங்கேனும் இருக்க வேண்டுமென யூகிப்பதற்கு அபாவம் எனப்படும். (உ-ம்) ஒருவன், 'அடே கொட்டகையிலிருக்கும் யானையைக் கொண்டுவா' என்கிறான். வேலையாளும் சென்றான்; ஆனல் யானையை அங்கு காணவில்லை. அருகில் எங்காவதிருக்கும் என்னும் இயற்கை முடிவு கொண்டு, அங்குமிங்கும் தேடிப் பார்க்கிறான். எதிர்பாராதவாறு மிக சமீபத்திலேயே யானை இருப்பதையும் கண்டு, அதனை எஜமானனிடம் சேர்ப்பிக்கிறான். இதுதான், ஓர் பொருள் உரிய விடத்தில் காணப்படாவிடினும் அருகிலெங்காவது இருக்குமென்ற நினைவுடன் தேடி அதனை அறிய முயலும் அபாவம் என்பது. இவ்வாறு 8 வகையான சாக்ஷியங்களை மிக சுருக்கமாக குறித்தோம்.

இதிகாசத்தை அத்தாக்ஷி தலைப்பிலும், அர்த்தபத்தி, சம்பவம், அபாவங்களை அனுமானத் தலைப்பிலும் அடக்கி விடுவதாயின் சாக்ஷியங்கள் 4 என குறுகி விடும். மேலும் உபமானத்தை, அனுமானத்திலுள் அடக்கி, 1 பிரத்யக்ஷம். 2 அனுமானம். 3 அத்தாக்ஷி என சாக்ஷியங்களை முக்கூறில் வகுப்பாருமுண்டு. எனவே, எப்பொருளிலும் உண்மை காண விழையு முத்தமர், தான் கற்ற அல்லது கேட்ட ஒவ்வொரு விஷயத்தையும் மேற்கூறிய 5 வகை உறை கல்லில் தீட்டி, மெய்ம்மை பொய்மைகளை அறிந்துய்வாராக. இந்நன்மையும் ஈசன் நமக்கருள்வாருக.

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."

[D. N. V. ராஜு, கோயமுத்தூர்.]

குறிப்புகள்.

சந்தாதார் கவனிக்க.

வேளாள மித்திரன் பத்திரிகையை அதிக பொருட் செலவில் ஓர் கிராமத்தினின்று வெளியிடுகிறோம். பலர், பத்திரிகையைப் பெற்றுக் கொண்டும், இன்னும் சந்தாத் தொகையை அனுப்பாமலுள்ளார்கள். சென்ற மாதம் பணம் அனுப்பாத சந்தாதார்கள் சிலருக்கு V. P. P. அனுப்பினோம். ஆனால் சிலர் ஊரில் இல்லையென வி. பி. பி. திரும்பி வந்து விட்டது. பத்திரிகை தேவையில்லாதவர்கள் முதலிலேயே நமக்கு எழுதாது V. P. வந்தவுடன் திருப்பி விடுவது முறையல்ல. ஆதலால் சந்தாதாரர்கள் தங்கள் சந்தாத் தொகையை பிப்ரவரி (12-2-30) 12-ம் தேதிக்குள் நமது ஆபீசுக்கு வந்து சேரும்படி அனுப்பி வைப்பார்களாக. அப்படி அனுப்பாத சந்தாதார்கட்கு, பிப்ரவரி 12-ம் தேதி யன்று வி. பி. பி. அனுப்பப் படும். அப்படி வி. பி. பி. அனுப்புவதினால், சந்தாதாரர்கட்குத்தான் 3 அணா நஷ்டமாகுமாகையால், சந்தாத் தொகையை மணியார்டர் செய்து விடுவதே சிறந்த முறையாகும். சந்தாத் தொகையை அனுப்பாதவர்கட்கு வி. பி. பி. வரும் பொழுது திருப்பி அனுப்பி விடாது பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

பத்திராதிபர்.

பத்திரிகை அபிவிருத்தி:

நம் நாட்டில், தினம் தினம் புதிய புதிய பத்திரிகைகள் தோன்றி ஆதரிப்பார் அதிகமின்றி, நஷ்டத்தில் உழைத்து, இருந்த இடந்தெரியாமற் போகின்றன. காரணம் என்னை என நோக்கின் நம் நாட்டில் பத்திரிகையின் உபயோகம் நன்கு தெரியாததினாலே யன்றி வேறல்ல. வெளி நாடுகளை கவனிக்கின் தொழிலாளர்கள், மாணவர்கள், மாதர்கள், உத்தியோகஸ்தர்கள், ஆகியோர் யாவரும் பத்திரிகை வாசித்து, உலகிலே, தினம் தினம் நடக்கும் நூதன விஷயங்களைத் தெரிந்து கொண்டு, சிறந்த அறிவாளிகளாக விளங்குகிறார்கள். ஆதலால் தா

குறிப்புகள்:

வெளி நாடுகளில் உள்ள பத்திரிகைகள் நல்ல நிலையில் உழைந்து வருகின்றன. நம் நாட்டில் 100க்கு 10 பேர் கூட நன்கு படிக்கத் தெரியாத நிலையிலுள்ளார்கள். படிக்கத் தெரிந்த மாணவர்களில் பலர், உத்தியோகத்தில் இருக்கும் உத்தியோகஸ்தர்கள் பலர், பத்திரிகையைக் கண்ணால் கூட பார்ப்பது கிடையாது. இங்ஙனமிருக்கின் நம் நாட்டுப் பத்திரிகைகள் அபிவிருத்தி அடைவதெங்ஙனம்? தற்கால கலாசாலைகளில் படிக்கும் மாணவர்களில் பலர் நவீன நாகரீக உடை உடுத்திக் கொண்டு, மனோ ராஜ்ஜியத்தை புத்தக ரூபமாக வெளியிட்ட உல்லாசக் கதைகளைப் படித்துக் கொண்டு, உல்லாசமாகத் திரியும் இளஞ் சிறுவர்கள் தங்கள் நாட்டைப் பற்றி கடுகளவும் சிந்தனை செய்யாது உள்ளார்கள். காரணம், தேச பக்தி ததும்பும் புத்தகங்களையும், பத்திரிகைகளையும், படிக்காததுதான். நிற்க.

சிலர் நாட்டு நலன் கருதியும், சமூக நலன் கருதியும், தினப் பத்திரிகைகளையும், வாரப்பத்திரிகைகளையும், மாத சஞ்சிகைகளையும் நடத்தி வருகிறார்கள். பத்திரிகை அபிமானமில்லாத நம் நாட்டில் பத்திரிகையைத் தோற்றி நன்கு நடத்துவது மிக்க சிரமமே. எனினும், தற்கால ஆசிரியர்கள், நாட்டு மக்கள் நலன் கருதி முதலில் சில பத்திரிகைகளை அனுப்பி, பத்திரிகாபிமானத்தை ஊட்டி, பின்பு சந்தாத் தொகையை அனுப்பும்படி எத்தனை வேண்டுகோள்கள் அனுப்பினும் கவனிக்காது, கடைசி முறையாக, ஆசிரியர், விடா முயற்சியுடன், இன்னும் சில சஞ்சிகைகளை அனுப்பி, இறுதியாக சந்தாத் தொகைக்கு வி. பி. பி. அனுப்புகிறார்கள். ஆனால், சிலர், பத்திரிகை அபிமானமும், தேசாபிவிருத்தியும் எண்ணாது, ஆசிரியர் அனுப்பிய சஞ்சிகைகளையும் பெற்றுக்கொண்டு வி. பி. பி. யையும் திருப்பி அனுப்பி விடுகிறார்கள். இவர்களைப்போல் பத்திரிகைகள் வளர்ப்பவர்கள் நம் நாட்டில் இருக்கும் வரையிலும் நாட்டின் நலன் விருத்தியடைவதெங்ஙனம்? இதன் உண்மையை உணர வேண்டின் வாசகர்கள் ஏதேனும் ஒரு பத்திரிகை காரியாலயத்தில் ஒரு நாள் சென்று பார்த்தால் எத்தனை

வி. பி. பி. கள் திரும்பி வருகின்றன என்பது விளங்கும். ஆதலால், இனியாகிலும் நம் நாட்டு மக்கள் தங்கள், நாட்டுப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் ஆதரித்து, ஆசிரியர்கள் ஊக்கத்தை, ஊக்கப்படுத்துவார்களாக. உண்மையாளர்கள் ஆசிரியர் அனுப்பும் பத்திரிகைகளை மட்டும் பெற்றுக்கொண்டு, வி. பி. பி. வந்த காலத்தில் திருப்பி விடுவது ஒழுங்கல்ல. வி. பி. பி. யை வேண்டாமென்று திருப்பி அனுப்பும் அன்பர்கள் தங்கள் நிலையை ஆசிரியர் ஸ்தானத்தில் எண்ணிப் பார்ப்பார்களாக. பத்திரிகை தேவையில்லையேல் ஆசிரியர் செலவிலேயே திருப்பி விடுவது நலம். ஆதலால் அன்பர்கள் ஆசிரியர் சிரமத்துடன் நடத்தும் பத்திரிகைகளை ஆதரித்து வளர்ப்பார்களாக.

பத்திரிகை கடன் வாங்கல்.

எந்நாட்டிலும் இல்லாத புதிய வழக்கம் நம் நாட்டில் ஒன்று இருக்கிறது. அதுதான் பத்திரிகை கடன் வாங்கல். மேனாடுகளில் ஏழைகள் முதல் பணக்காரர் வரை தங்கள் வருவாயில் 100-க்கு 5 ரூபாய்க்கு மேல் பத்திரிகை தருவிப்பதிலும், புத்தகங்களை வாங்குவதிலும், செலவழிக்கிறார்கள். ஆனால் நம் நாட்டிலோ ஒருவருக்கு பத்திரிகை வந்தால் அதைப் பலர் கடன் வாங்கிப் படிப்பதற்குத் தயாராயிருக்கிறார்கள். மேல் நாட்டு மக்கள் பிறரிடமிருந்து பத்திரிகைகளை கடன் வாங்கிப் படிப்பதைக் கேவலமெனக் கருதுகிறார்கள். ஆதலால் நம் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் ஏதேனும் ஓர் பத்திரிகை வரவழைத்து வாசித்தல் வேண்டும். மற்றும் காலஞ் சென்ற பாஞ்சால சிங்கமான லாலா லஜபதிராய் அவர்கள் கீழ் கண்ட வாக்கியத்தை அடிக்கடி சொல்லுவார்கள்.

"நம் நாட்டு நலன் கருதி உழைக்கும் பத்திரிகைகளை ஒவ்வொருவரும் ஆதரித்தல் வேண்டும். அவ்விதம் செய்யேல், பத்திரிகா அபிவிருத்தி ஏற்படாது. பத்திரிகாபிவிருத்தியும் இல்லை. ஆகலால் புத்தகமோ, அல்லது பத்திரிகையோ அவரவர் பணம் கொடுத்து வாங்கிப் படிப்பதுதான் சிறந்த முறையாகும். பணம் செலவழித்து பத்திரி-

கையோ அல்லது புத்தகமோ வாங்கின் அவைகளை ஊன்றிப் படிக்க உங்கள் மனம் தூண்டும். ஆதலால் என் நாட்டு சகோதரர்களே! நாகரீகப் பித்தில் மயங்கி, மனம் போனபடி செலவுசெய்யும் பணத்தை பத்திரிகா அபிவிருத்தியில் சில வழிப்பீர்களாக." ஆதலினாலே, இனிமேலும் இந்தியர்கள் தங்களால் கூடுமான வரையிலும் பத்திரிகையை கடன் வாங்கும் வழக்கத்தை நிறுத்தி, ஒவ்வொருவரும் தங்கள் சமூகப் பத்திரிகைகளோ அல்லது நாட்டின் நலன் கருதி உழைக்கும் பத்திரிகைகளையோ வாங்கி ஆதரிப்பார்களாக.

இந்தியாவில் சிகரெட்.

தற்காலம் உலகில் சுருட்டுக் குடி சிறுத்துச் சிகெரெட் குடி பெருத்துக் கொண்டு வருகிறது. சிகரெட்டுக்கு புகயிலை அவசியம் வேண்டியிருப்பதால் புகயிலைக்கு உலக தேவை அதிகமாய் கொண்டு வருகிறது. மற்றும் தற்கால இளைஞர்கள் பலர் சிகெரெட் குடிப்பது நாகரீகமென எண்ணி அளவு கடந்து குடிக்கிறார்கள். ஆனால் சிறு வயதிலேயே சிகரெட் குடிப்பதை பள்ளிக்கூட ஆசிரியர்கள் தடுத்தால் நலமாயிருக்கும். ஏனெனில் சிகரெட் குடிப்பதினால் பல வித ரோகங்கள் உண்டாகி, கண்களையும் கெடுத்து விடுகிறது. ஆனால், தற்காலத்து கலாசாலை ஆசிரியர்களே பலர், சிகரெட் குடிப்பதினால் அவர்கள் மாணவர்களை எச்சரிக்கத் தயங்குகிறார்கள். இப்பொழுது ஆண்டுக்கு 650 கோடி சிகெரெட்டுகள் இந்தியாவில் செலவாகின்றன. ஆதலால் வயதில் பெரியோர், சிகெரெட்டு குடிக்கிறார்களே என்று இளைஞர்கள் பிடிக்காதிருப்பார்களாக. இதற்கு ஒரு உதாரணம் ஒன்று இங்கு கூறுதல் பொருந்துமென எண்ணுகிறேன். கடந்த 25 ஆண்டுகட்கு முன் நீதிபதியாகவும், காங்கிரசிற்குத் தலைவராகவும் இருந்த மாதவ கோவிந்தரானடே அவர்கள், தான் சிறு[illegible] இருக்குங்கால் சிகரெட்டோ அல்லது சுருட்டோ பிடித்தறியார். இங்ஙனமிருக்க ஒரு நாள் ஒரு நீதிபதி இவர் வீட்டிற்கு விருந்தினராக வந்தார். அவர் எப்பொழுதும் சிகரெட் [illegible]

இரவு போஜனத்திற்குப் பின் ரானடேயை அழைத்து, தம்பி, ஒரு சிகரெட் பெட்டி கடையில் வாங்கிவா, என்றார். உடனே ரானடே அவர்கள், சிறு பையனாக இருந்த போதிலும், "சிகரெட் குடிப்பதினால் தேகத்தில் பல ரோகங்கள் உண்டாகின்றன. ஆதலால் அதை வாங்கிக்கொண்டு வந்து உங்கட்குக் கொடுக்க இஷ்டமில்லை" என்றார். இதைக் கேட்டும் நீதிபதி, ரானடேயிடம் எவ்வளவோ சொல்லியும் வாங்கி வர மாட்டேன் என சொல்லி விட்டார். பிறகு அந்நீதிபதி கடைக்குச் செல்ல ஒருவரு மில்லாமையால், சிகரெட் இன்றி, வாட்ட முற்று, நித்திரையின்றி துன்ப மடைந்தார். பிறகு மறு நாட் காலையில் வேறொருவரிடம் சொல்லி சிகரெட் வரவழைத்துக் குடித்தார். ஆதலால் இளஞ் சிறுவர்களே, பாரதப் புதல்வர்களே, தீய வழக்கங்களை நீக்கி நல்வழக்கங்களைக் கைக்கொண்டு திரேக சுகத்துடன் வாழ்வீர்களாக.

சைவ பரிபாலன சங்கம் :

1930 வருஷக் கட்டுரைப் பரிசு, இரண்டு பொற் பதக்கங்கள். குறித்த விஷயங்களைப் பற்றி சிறந்த கட்டுரைகள் எழுதியனுப்பும் தமிழ் மாணவர், பண்டிதர்களுக்கு, அவர்கள் பெயர் பொறித்து பரிசு அளிக்கப் படும்.

விஷயங்கள் : 1. சிவாலயங்களின் இயல்பு. அவற்றை நாம் பரிபாலனம் செய்வதில் என்ன சீர் திருத்தங்கள் தேவை ?

2. சைவ மடங்களின் நிலை. அவை கெட்டொழிந்து போகாமல் நாம் எவ்விதம் பாது காத்து பரிபாலிக்க வேண்டும் ?

சர்வ கலாசாலைகளிலும், வெளியிலும், உள்ள எல்லா மாணவர், அறிஞர், பண்டிதர், யாவரும் தமிழில் கட்டுரை எழுதியனுப்பலாம். சிறப்புடையதாகக் காணப் படும் கட்டுரைகள், சங்கத்தார் யுக்தமாகத் தோன்றினால், அச்சிட்டு, விற்பனை செய்யவும் உரிமை உண்டு. 1930-ம் ஆண்டு எப்ரல் முடிவுக்குள் அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஐ. சி. ஈசுவரன் பிள்ளை,
சைவ பரிபாலன சங்கம்:
திருக்குற்றாலம்.
(திருநெல்வேலி ஜில்லா.)

உலக நடப்பு.

நியூயார்க்கில் ஸ்ரீமான் ஊரிஸ் என்பவருக்கு நூறு வயதாகியும், இன்னும் உத்தியோகத்தில் இருக்கிறார்.

1928-ம் ஆண்டில் இங்கிலாந்தில் எழுபது வயதுக்கு மேற்பட்ட கிழவர்களில் 1,292 பேர் விவாகம் செய்து கொண்டார்கள்.

ஸ்ரீமான் ஹென்றி போர்ட் தமது தொழிற்சாலையில் இதுவரையிலும் 55,00,000 மோட்டார் வண்டிகள் உற்பத்தி செய்திருக்கிறார்.

பெல்ஜியம் அரசர் உயர்ந்த மலைகள் மீது ஏறுவதில் பெரிய நிபுணராம்.

ஆஸ்திரேலியாவில் உற்பத்தியாகும் ஆப்பிள் பழம் தேங்காய் பருமனிருக்கிறதாம்.

அமெரிக்காவில் ஸ்நான உடுப்புகளுடன் கல்யாணம் செய்து கொள்வது நாகரீகமெனக் கருதப் படுகிறது.

பிரிட்டிஷ் தொழிற் கட்சியில் இப்பொழுது 20,77,000 பேர் அங்கத்தினராயிருக்கின்றனர். முன் இருந்த அங்கத்தினரை விட இப்பொழுது 12,16,000 பேர் குறைந்திருக்கின்றனர்.

அமெரிக்காவில் வருமான வரி செலுத்துவோரில் ஆண்களை விட பெண்களே அதிகமாயிருக்கின்றனர்.

பத்தாயிரம் அடி உயரத்தில் பறக்கும் ஆகாய விமானங்களுடன் கம்பியில்லாத் தந்தி மூலம் பேச ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகி

பிள்ளையில்லாத ஒரு கோடீஸ்வரன் தாம் ஒரு குழந்தையை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள விரும்புவதாக விளம்பரம் செய்ததில் இவருக்கு 10 லக்ஷம் விண்ணப்பங்கள் கிடைத்தனவாம்.

அமெரிக்காவில் சென்ற வருஷம், பெண்கள், கன்னங்களையும், உதடுகளையும் அழகு படுத்துவதற்காக, 2,375 டன் சிவப்புப் பவுடர் சிலவாயிற்றாம்.

அமெரிக்கா அரசாங்கத்தார், எலிகளைக் கொல்வோருக்குப் பரிசி அளிக்கிறார்கள்.

மரங்குத்திப் பறவைகள், மழை காலத்திற்கு வேண்டிய உணவுகளை, கோடை காலத்திலேயே சேர்த்து வைத்துக் கொள்கின்றன.

சென்ற ஆண்டில், லண்டனில் 1,844 மோட்டார் வண்டிகள் களவு போயினவாம். அவைகளில் 1,709 வண்டிகள் கண்டு பிடிக்கப் பட்டனவாம்.

பாரிஸ் நகரத்தில் ஒவ்வொரு நாளும் எட்டு டன் குப்பைகள் சேர்க்கப் படுகின்றனவாம். இக்குப்பைகளை உடனே கொளுத்தி விடுகிறார்கள். கொளுத்தும் போது உண்டாகும் புகையினால் மின்சாரம் உற்பத்தி செய்யப் படுகிறதாம்.

கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையிலுள்ள ஆசிரியர் ஒருவர் தம் வீட்டை கண்ணாடியிலேயே கட்டியிருக்கிறார்.

சென்ற மாதத்தில் மட்டும் பிரிட்டிஷ் நிலக்கரிச் சுரங்கங்களினின்று 2,088,9,000 டன் நிறையுள்ள நிலக்கரி எடுத்திருக்கிறார்கள்.

தெரித்த மணிகள்.

எச். ஜி. ரீகேட்---வறுமையை விட செல்வமே ஒரு மனிதனை அழித்து விடுகிறது. ஆனால், பின்னையதால் ஏற்படும் அழிவு, சுவையுள்ளதா யிருக்கிறது.

கேட்னெட்---நேற்று ஆடம்பரமாகக் கருதப் பட்ட பொருள்கள், இன்று, இன்றியமையாதனவாகக் கருதப் பட்டால் வாழ்க்கையில் அதிக செலவு ஏற்படுவதில் ஆச்சர்ய மில்லை.

எம். ஆர். சட்டன்---பணக்கார சோம்பேரிகள் பண மில்லாதவர்களை ஏமாற்றுவதிலேயே சுறு சுறுப்புள்ளவர்களா யிருக்கிறார்கள்.

காந்தி அடிகள்---நாம் ஒருவருக் கொருவர் நம்பிக்கை கொள்ள வேண்டும். கடைசியில், நம்மிடத்திலும், ஆண்டவனிடத்திலும் நம்பிக்கை கொள்ளல் வேண்டும்.

ஆரோக்ய தரிசனம்.

V

மல நீக்கம்.

[137ம் பக்கத் தொடர்ச்சி]

(டாக்டர் D. S. P. ராஜா)

மேனாட்டாரின் அத்தாட்சி யின்றி எதனையும் நம்பும் இழிகுணம் இந்தியரிட மின்மையால், 'வேக நிரோதனத்தை'ப் பற்றிய அன்னார் ஆராய்ச்சி முடிபுகளில் ஒரு சிலவேனும் இங்கு குறித்தலமையும்.

Constipation: மலபந்தம்:—"பெருங் குடலின் அடியில் நிறைந்துள்ள மலத்தை வெளிப் படுத்து," என்றெழும் இயற்கை உணர்ச்சியை அவமதிக்கும் தீப்பழக்கம்---எல்லாக் காரியமும் முடியும் வரை பலவந்தமாக மலத்தை அடக்கிக் கொண்டிருக்கும் கொடிய வழக்கம்-ஆகிய இரண்டும் மலபந்தத்திற்கு மூலப் பெருங் காரணங்களாகும். [illegible] விசர்ஜன உணர்ச்சியை அவமதிப்பதால், குத பாகத்திலுள்ள அதி நுண்ணிய நரம்பு அமைப்புகள் தம்முணர்ச்சியை இழந்து விடுகின்றன. ஏனெனில், ஒன்றுமில்லாதிருக்க வேண்டிய குத டகத்தில் (Rectum), பலவந்தமாய் அடைக்கப் பட்ட மலம் மிகு பசி-வாண்டு-அப்பாகத்தை அகன்று நிலையிலேயே வைத்து விடு[illegible]றது. இதனால் சுருங்கி, விரியும் குத வளையங்களில் இயற்கை குணம் [illegible]கிறது. இத்தொழிலை ஏற்றுக்கொண்ட பெருங் குடலின்

ரகம், தன்னிடத்துள்ள வரண்ட-இறுகிய மலத்தை மிகக் கடுமையாக---இச்சுரணையற்ற குதத்தில் தள்ளுகிறது. உணர்ச்சியின்மையால், தகுந்தவாறு ஈடு கொடுக்க வியலாத குத வளையங்கள், மலத்துடன் வெளியே பிதுக்கப் படுகின்றன. இதனால், மூலம் (Piles) வெடிப்பு (fissures) முளை முதலிய ஆசன நோய்களுண்டாகின்றன.

Wikaws Dictionary Treatment·

விசர்ஜன உணர்ச்சியை அவமதிப்பதால் பெருங்குடலினடிப் பாகமும், குதப் பகுதியும், உருண்டையான கடின மலக்கட்டிகளால் விரிந்து போகின்றன. அடி வயிர் கனத்துப் போதல்-குத வளையங்களிலுள்ள காரிரத்தக் குழாய்களின் வீக்கம் (Swelling of Hae morrhoidal Veins) அவை வெடிப்பதாலுறும் ரக்தப் போக்கு-- இவ் வெடிப்புகளில் மலக் கிருமிகள் விருத்தியாவதாலுண்டாகும் கிருமி, குதம் (Pruitus ani) முதலிய உண்டாகின்றன.

வரண்ட மலக்கட்டிகள், இடுப்பினுட்பாகத்தைக் கடினமாக அழுத்துவதால் துடைச் சந்துகளில் வேதனை—உப்பிசம்—பொருமல் குறி எழுச்சி, நாவில் வெண்மை—மஞ்சள் கலந்த முட்கள், துர் ஸ்வாசமிவை உண்டாகின்றன. உடற் சோம்பல், மனக்கலக்கம், உற்சாகமின்மை, தலைவலி புத்தி மந்தம் முதலியவைகளோடு கடுமையானமானத தளர்வு ஏற்படுகிறது. அளவு கடந்து தம்மிடம் தேக்கப் பட்டுள்ள காரணத்தால், மலத்தின் இளகிய தன்மைக்கு மூலமாயுள்ள திரவப் பொருள்களை விரிந்த குடற் சுவர்கள் உறிஞ்சி விடுகின்றன. இதனால்தான் மலம் கட்டி கட்டிகளாக இறுகிப் போகின்றன. இவ்வாறு உறிஞ்சப் பட்ட திரவப் பொருளை முக்கும் போது சிறிது சீத்துடன் கூடி, மலம் வெளிப்படு முன் விழுகிறது. இதனால் சீத, ரத்த பேதிகள் உண்டாகலாம். குடல் அழற்சியாலுண்டாகும் வயிற்று நோய் (Catarrhal Colitis), Stercoral ulcers ஆசன ரணம் முதலியவு முண்டாகின்றன."

Taylor's Medicine:

"மல பந்தத்தால் கடுமையான சோம்பல், மனக்களர்ச்சி, பசி

யின்மை, தலைவலி, உடல் வெளுப்போடு கூடிய பலஹீனம், குடல்களின் விறைப்பு முதலியவை தோன்றுகின்றன.'

P. 38 Moores family Medicine:

மலபந்த மதிகமாயுள்ள போது, சிரமப் பட்டு மலத்தை வெளிப் படுத்துவதால், குடலிறங்கி, அண்ட விருத்தியும் Hernia, குடல்கள் இந்திரிய கோளங்களை நசுக்குவதால், இந்திரிய ஸ்கலிதமும் ஏற்படுகின்றன.

மூத்திரத்தை அடக்குவதால், மூத்திரப்பை விரிந்து, சுருங்கி, அதனை வெளிப்படுத்தும் தன்மை இழந்து விடுகிறது. இதனால் ஹஸ்தியின் பலவீனம் (a Long of the bladder), stone graval, அஸ்மரி ஹஸ்தி அழற்சி, கஷ்டப்பட்டு வெளிப்படுத்துவதால், நீர்தாரை ஹஸ்தி யிவைகளின் பிளவு, (Rupture of the bladder and Urethra) முதலிய கொடும் வியாதிகளு மேற்படுகின்றன.

Sir William Moore:

இவ்வாறே மேனாட்டு ரோக நிதான நூல்களான Green's Pathology முதலியவற்றை ஆராய்ந்து சென்றால், அஷ்டாங்க ஹ்ருதயத்தில் கூறிய ஒவ்வொன்றிற்கும் நேரான உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். விரிவஞ்சி விடுத்தனம். வேண்டுவோர் அவற்றில் காண்க எனவே, நோய் நீக்கம் வேண்டுவோர் இயற்கையாய் வெளியாகும் மல ஜலமாகிய மலங்களை ஒரு போதும் தடுத்தலாகாது. ஆகையாற்றான் தனையே சிற நூல்களான குமரேச நாராயண கயிலாசநாதர் சதகங்களும் 'மலஜல மடக்கலாகா' தென்றன. "திண்ணமிரண்டுள்ளே சிக்கவடக்காமல், பெண்ணின் பால் ஒன்றைப் பெருக்காமல்" இருப்பாருக்கு நோயில்லை எனக் கூறியர் தேரையரே. இதன் அவசியத்தை உணர்த்த வேண்டி, மீண்டு மொரு செய்யுளில், மல ஜலங்களை அடக்காமல் வெளியாக்குவோர்க்கு, வாத பித்த கபங்கள் மிகுந்தும், குறைந்தும், நோய் செய்யா; சம நிலை எய்தும். உடற்கு வேண்டிய சமாக்கினி யுண்டாகும்; பிணிக் கூட்டங்கள் வரா. இவை யில்லையெனின் எமனுக்கினையான மரணமுமில்லை.

'இருமல மடக்காது இறக்குங்கால், மூன்றும்,
இருமலக்காடு அங்கணிலே, எய்தும்:—இருபச்
சமனுக்கினி சாரும், சாரா கோயிட்டம்;
எமனுக்கினையுஞ் சாராதாம்.'' என்றனர்.

இதனை 'மலத்தினீட்டமே மரணத்தை உண்டாக்குகிறது. அதனை அவ்வப்போது நீக்கலே சிரஞ்சீவியாயிருக்கச் செய்யுமுயர் சாதனம்' என்ற கார்லைல் சைமனின் ஆராய்ச்சி முடிபோடு ஒப்பிட்டுப் பார்த்து, நம் நூலின் ஏற்றங்காண்க. 'தடைபடுத்தலாகாது மலங்களை' என்றதாலேயே கண்ட விடத்திலெல்லாம், நியதியின்றி, அவற்றை கழிக்கலாமென்பது பொருளல்ல. இக்கழிவுப் பொருட்களிலுள்ள நுண்ணிய கிருமிகள், பல வேறு நோய்களை உண்டாக்குவன. (உ-ம்) கொக்கிப்புழு நோய், டைபாய்ட் ஜுரம், காலரா, சீத, ரத்த பேதி, வயிற்றுப் போக்காதி நோய்கள் இதனாலுண்டாகின்றன. ஆகையாற்றான் பலர் நடமாடும் "வழி, குழி, நீர்நிலை, கோமய விடம், சாம்பரிடம், சுடலை, பூந்தோட்டம், உழுத நிலம், அறுகம்புல் பூமி, மரநிழல், கற்சந்தி, முச்சந்தி, களர் நிலம், கடற்கரை, நதிக்கரை, பசு மந்தை நிற்குமிடம், இடிவீழிடம், புற்று, அருவி பாயுமிடம், மலை முதலிய விடங்களில் மலங் கழிக்கலாகா" தென்றனர்.

இவ்விடங்களில் மலங்கழிப்போர்க்குத் தண்டனை விதிக்க வேண்டுமென மனு தர்மமும் கூறுகிறது. தற்கால அரசாங்கத்தாரு மிதனைச் செய்கின்றனர். ஆகையால், நமது நலங்கருதியாவது, வீட்டு முன்றிலில், பாதைகளில், பெரியோரேயன்றி குழந்தைகளு மிதனைச் செய்யாவாறு தடுத்தல் வேண்டும். சுகாதார நூலாசிரியனை வில்லியம் மூர் என்பார், தமது நூலின் 550 பக்கத்தில், 'மலங்களை வீட்டிற்கு குறைந்தது 400 கஜங்களுக் கப்பாலுள்ள விடத்தில் அகற்றி, அதனை புதைத்தோ அல்லது எரித்தோ விட வேண்டு' மென்கிறார். நமது நூல்களிலோ "தமது வீட்டி லிருந்தல்ல தாம் குடியிருக்கும் நீணகரின்

புறத்தகன்று நானூறு விற்கிடை போய் மலங்கழித்தல் வேண்டு" மென்றிருக்கிறது. இதில் சிறந்தது எது என்பதையும், 400 என்றிருவரும் குறித்துள்ளதை, எவர் எவரிடமிருந்து பார்த் தெழுதினர்கள் என்பதையும் கண்டு தெளிவார்களாக.

உலக விநோதம்.

பிறவிக் குருடர்கள் யாவரும், இனி எல்லா புத்தகங்களையும் படிக்கக் கூடியவாறு, மின்சார சக்தியைக் கொண்டு, ஒரு கருவி கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. இக்கருவிக்கு "விசோகிராப்" என்று பெயர். அச்சடித்த எழுத்துகளின் மீது, இக்கருவியினின்று உண்டாகும் வெளிச்சம் விழுங் காலையில், வித விதமான சப்தங்கள் உண்டாகும். இவைகளைக் கொண்டு குருடர்கள் எழுத்துகளைத் தெரிந்து கொண்டு படிக்க முடியுமாம்.

டாஸ் மேனியா என்ற பிரதேசததில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் கணக்கற்ற சேதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், டாஸ் மேனியா எக்சாமினர் என பத்திரிகை மட்டும் பல இன்னல்கட்கிடை தினம் தினம் வந்து கொண்டிருக்கிறதாம். இவர்களிடம் இருந்த மின்சார மிஷின்கள் யாவும் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய் விட்ட படியால், நிலத்தை உழும் மிஷன்களைக் கொண்டு, அதன் மூலமாக பத்திரிகைகளை அச்சடிக்கும் இயந்திரங்களை இயக்கச் செய்து, பத்திரிகை வெளியிட்டு வந்தனர்.

சமீபத்தில் அமெரிக்காவிலே ஒரு ரசாயன சாஸ்திரி மின்சார சக்தியின் மூலமாக குழந்தைகளை ஆட்டும் தொட்டிலைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இத்தொட்டிலில் படுக்க வைத்திருக்கும், குழந்தை அழுமானால், தாய் தாலாட்டுப் பாட்டு பாடுவது போல் பாடிக் கொண்டு தொட்டில் ஆடுமாம். குழந்தை அழுகை நின்ற உடன் பாட்டும் நின்று விடுமாம். இத்தொட்டிலில் குழந்தையின் அழுகை மின்சார சக்தியைத் தூண்டுகிறது. அந்த [illegible]

டில் ஆடுகிறது. அவ்வாட்டத்தினால் தொட்டிலில் இணைக்கப் பட்டி
ருக்கும் கிராம போன் பாடுகிறது. இங்கிலாந்தில் மான்செஸ்டரி
லிருந்து 60 மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்த இரயில் வண்டி
யை, அதில் பிரயாணம் செய்த மாது, அபாய சங்கிலியை, திடீரென
இழுத்து, ரயிலை நிறுத்தி விட்டார். கார்ட் உடனே அம்மாதிடம்
சென்று காரணம் கேட்டார். அதற்கு அம்மாது தனக்கு ஒரு
கோப்பைத் தண்ணீர் வேண்டியிருக்கிறதென மிக பொறுமையுடன்
சொன்னாராம். கார்ட், உடனே அபாய அறிவிப்பில் என்ன எழுதி
யிருக்கிறது பார் என்று சொல்லி, இச்சங்கதியை அதிகாரிகட்கு
அறிவிக்கப் படுமெனச் சொல்லிப் போய் விட்டாராம்.

1921-ம் ஆண்டு கணக்குப்படி பிரிட்டனில், 100 வயதிற்கு
மேற்பட்டவர்களில் ஆண்கள் 30 பேரும், பெண்கள் 80 பேரும்,
ஸ்காத்லாந்தில் 6 ஆண்களும், 29 பெண்களும், இருந்தார்கள். 1911
ஆண்டு கணக்குப் பிரகாரம் ஐயர்லாந்தில், 314 பேரும், 1926-ம் ஆண்
டில் ஐரிஷ் சுதந்திர நாட்டில் 114 பேரும் இருந்தனர்.

சமீபத்தில் லண்டனில் நடை பெற்ற ஒரு பொருட் காட்சியில்
ஓர் யந்திரம் வைக்கப் பட்டிருந்தது. இதன் நீளம் கால் அங்குலம்.
இதன் கருவிகள் வேலை செய்வதை கண்ணால் காண முடியாதாம்.
காற்று வேகத்தில் இது வேலை செய்கிறது. இதைக் கண்டு பிடித்த
வரின் மனைவியின் தலை மயிர் இந்த இஞ்சின் ஓட்டும் பெல்டாக
உபயோகப் படுகிறதாம்.

2 20491

Classified Bargains.

Small advertisements under this head are charged at half anna (0-0-6) per word, minimum Re. 1 payable by postage stamps or by M. O.

ADDRESSES FOR SALE :—Reliable addresses of general status are available at Rs. 1-8-0 per 600. Printed copies. Apply to Advr. No. 75 c/o Velala Mitran, Madukkarai, P. O., (Via) Podanur, S. I. Ry.

HANDBILLS DISTRIBUTED in Coimbatore, Salem, Madura, Trichy and Tanjore Districts at Rs. 2. (in advance) per 1000. Apply to Advr. No. 76 c/o Velala Mitran, Madukkarai, (Via) Podanur, S. I. Ry.

WANTED AGENCIES from reliable firms: Apply with samples and particulars to Advr. No. 77 c/o Velala Mitran, Madukkarai, (Via) Podanur, S. I. Ry.

WANTED AGENTS in South India and Ceylon to canvass advertisements and subscribers for *Velala Mitran.* 20% allowed in net collection. Accounts settled during the first week of every English month. Apply to the editor.

"தென்னாடு"

ஆசிரியர். த. நடராஜன். மூன்று ஆண்டுகளாய் நிலவிவரும் வாரப் பத்திரிகை.

உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் சமாசாரங்களை யெல்லாம் தென்னாட்டில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வரும். பாரத தேசம் சகல அம்சங்களிலும் சுயராஜ்ஜியம் பெற்று உலக மெல்லாம் க்ஷேமமடைய வேண்டு மென்பது "தென்னாடின்" நோக்கம்.

சந்தா விவரம்.

உள் நாடு ரூ.	4	0	0
வெளி நாடு ரூ.	5	0	0
தனிப் பிரதி அணா	0	2	0

விளம்பரம் செய்ய விரும்புவோர் மானேஜருக்கு எழுதவும்.

மானேஜர்,
"தென்னாடு"
307 தங்கசாலை தெரு,

THE

India Life Benefit Society, Ltd.

(Registered under the Companies and Insurance Societies Act of the Government of India).

இந்தியா லைப் பெனிபிட் ஸொஸைடி, (லிமிடெட்)

தலைமை ஆபீஸ் : கோயமுத்தூர்.

கவர்ன்மெண்டு லோகல் போர்டு உத்தியோகஸ்தர்களுக்கு முக்கியமாக

கிராம உபாத்தியாயர்களுக்கு

அதிக அனுகூலமுள்ளது.

மாதா மாதம் 1 ரூ. அல்லது 2 ரூ. வீதம் 10 வருஷம் அல் அதற்குக் குறைந்த காலத்துக்கே கட்ட வேண்டும். முறை ரூ. 250-க்கும் பாலிஸி கொடுக்கப்படும்.

அடியிற்கண்ட ஸம்பவம் எதுவாயினும் நேர்ந்தவுடன் தொகை கொடுக்கப்படும்.

ஜீவ இன்ஷூரர் செய்திருப்பவர் :

(a) மரணமாதல்.

(b) 60 வயதடைதல்.

(c) அகஸ்மாத்தாய் ஏற்படும் ஆபத்து அல்லது வியாதி காரணமாக அதன் பிறகு தொடர்ச்சியாய் ஒரு வருஷத்துக்காவது வேலை செய்ய முடியாமலிருத்தல்.

(d) பாலிஸி பிறந்து மூன்று வருஷங்களுக்கு மேல் சர்க்கார் அல்லது லோகல் போர்டு சர்வீஸ் அல்லது டைரக்டர்கள் அங்கீகரிக்கும் வேறு சர்வீஸிலிருந்து ரிலீவ் ஆதல்.

(e) கடைசி சந்தா வாய்தாவில் கட்டி 5 வருஷமாதல்.

நமது ஸங்கத்துக்கு நபர்களைச் சேர்க்கவும், பணம் செய்தனுப்பவும் முக்யமான கிராமங்களில் ஏஜண்டுகள் வே சம்பளம் மாதம் ரூ. 15 முதல் ரூ. 50 வரை கொடுக்கப் ஒரு கிராமத்திற்கு ஒரு ஏஜண்ட் மட்டுமே வேண்டும்.

இன்னும் வேண்டிய விவரம் ஒரு அணா ஸ்டாம்ப் அ. தெரிந்து கொள்க.

Printed at the Magazine Press, Chingleput, and Edited and Publi by M. A. Balasubramania Mudaliar, at Madukkarai, Coimbator

(1)	(2)	(1)	(2)